வெளிவந்துவிட்டது:



விலை அணா 6

Regd. No. M. 4849 PONNI 10th April 1949

தமிழச்சி


வாணிதாசன்



செந்தமிழ்ப் பதிப்பகம்

விலை அணா 8.

பொன்னி



25-4-49

5

...ரிவந்துவிட்டது

தமிழச்சி

வாணிதாசன்



செந்தமிழ்ப் பதிப்பகம்

விலை அணா 8

செய்திப்பாட்டு

குடியாட்சி தழைத்தது

பத்திரிகைச் செய்தியிலே நல்லதுண்டா தம்பி - அதைப்
பார்த்துக் கொஞ்சம் படித்திடுவாய் அன்பான தம்பி!
இத்தரையில் மகிழ்ச்சிதரும் இன்பக் குடியாட்சி - தன்னை
எய்திக் களித்தனர் அயர்லாந்து நாட்டினர் அண்ணா!

குடியாட்சி மலர்ந்ததெனும் செய்தியிலே தம்பி - இன்பம்
கொஞ்சுதடா உள்ளம் துளிந்ததடா மேலும்படி தம்பி!
அடிமைத் தளையில்நூற் றாண்டுகள் பலவாய் - மிக்க
அல்லற் பட்டவர் இல்லமெலாம் விடிந்ததே அண்ணா!

இல்லாமற் போதுமோ இன்பந்தான் தம்பி - உரிமை
எய்திக் களிப்பதே இன்பத்தின் உச்சியடா தம்பி!
எல்லா மக்களுமே டப்ளின்மா நகரில் - மிக்க
இன்பத்தில் துள்ளி எழுந்தார்ப் பரித்தாராம் அண்ணா!

பிரிட்டிஷ் பிடிவிட்டுப் போனதனால் தம்பி - அவர்
பெற்ற மகிழ்ச்சிக்கோர் முற்றுத்தான் உண்டோடா தம்பி!
நாட்டு மதம்வளர்க்கும் கோயிலிலே கூட - விழாக்
கொண்டாட மணியடிக்கக் கண்டாராம் அயர்நாட்டார் அண்ணா

குடியாட்சி தழைப்பதொரு நற்காலம்தம்பி - வளம்
குன்றாத திராவிடத்திற் சென்றுவரும் என்றேங்கும் நெஞ்சே!
அடிமைப் புத்தியினை அகற்றித் திராவிடர்கள் - ஒன்றாய்
அரசியலிற் போராட முரசறையும் காலத்தில் அண்ணா!

— "அம்மான்"



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 6

திருவள்ளுவர் ஆண்டு 1980 விலை அணு 5
சித்திரைத் திங்கள் 13-ம் நாள் 25—4—49



திருவாங்கூர்த் தமிழர்கள்!

தமிழ் பேசும் மக்கள் மூன்று வித அதிகாரத்தின் கீழ் இப்போது வாழ்ந்து வருகின்றனர். சென்னை மாகாண ஆட்சியில் தமிழர்களில் பெரும் பகுதியினரும், பிரெஞ்சுக்காரர் ஆட்சியில் சிறு தொகையினரும், திருவாங்கூர் மன்னர் ஆட்சியில் இருபது லட்சம பேருமாகத் தமிழ் மக்கள் துண்டு துண்டாக வாழ்ந்து வருகிறார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசுகின்ற மக்கள் அனைவரையுமே ஒன்று சேர்த்துத் திராவிடத் திருநாடு நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு நிறைந்த ஆதரவு கிடைத்து வரும் இந்நாளில் தமிழ் மொழி பேசும் மக்கள் தொகுதியே மூன்று பிரிவாக இருந்து வருவதை யார் தான் வரவேற்க முடியும்? தமிழர்கள் ஒரு சேர வாழ எண்ணுவதும் இயற்கை தானே! இம்முறையில் தென் திருவாங்கூரில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டு மென்று நெடு நாட்களாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். திருவாங்கூர்த் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் நிறுவனம் இக் கிளர்ச்சிக்கு முழுப் பொறுப்பும் வகித்து வருகிறது. இந்நிறுவனம் வெறும் பொம்மை அமைப்பாகவோ, பித்தலாட்ட ஸ்தாபன மாகவோ இயங்க வில்லை யென்பது, இக் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப் பட்டவர்களே தென் திருவாங்கூர்ப் பகுதிகளில் சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதினின்றும் தெரிந்து கொள்ளலாம். எனவே தமிழ் பேசுகின்ற திருவாங்கூர் வாசிகளின் ஒருமித்த கருத்தையே தி. த. நா. காங்கிரஸ் பிரதிபலிக்கிறதென்று திண்ணமாகக் கூறலாம்.

திருவாங்கூர் மலையாள மன்னரின் ஆட்சியில் இருக்கிறது; அங்கே மலையாளம் பேசுவோர் தொகை அதிகம். எனவே ஆட்சிப்பிடி மலையாளிகளிடம் இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. மலையாள ஆட்சியில் தமிழர்களின் கோரிக்கைகள் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றி வைக்கப்படும் என்று யார் தான் எதிர்பார்க்க முடியும்? அதே போன்று அங்கே தமிழ் மொழி வளர்ச்சி குன்றாமல் விளங்குவதும் எப்படி இயலும்? தமிழரின் குறைகள் பெருகின. திருவாங்கூர் மன்னரிடம் கோரிக்கைகள் சென்றன. மன்னர் ஆட்சி குறைகளை நீக்குவதற்குப் பதிலாக அடக்கு முறையையும் உரிமைகளைப் பறிப்பதையும கையாளத் தொடங்கிற்று; போலீஸின் உதவியால் தமிழர் காங்கிரஸைக் குலைக்கப் பார்த்தது.


அடக்கு முறைகள் எப்போதுமே நியாயமான கோரிக்கைகளைப் புதைத்துவிட முடிவதில்லை; அஃதே போன்று திருவாங்கூர்த் தமிழர் கோரிக்கையும் மக்கிப் போகாமல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. இப்போது—திருவாங்கூரும் கொச்சியும் ஒரே அரசாக இணையப்போகும் நிலையில், இரண்டு மலையாளத் தனியரசுகளும், தங்கட்குப் பொதுமொழி மலையாளம் என்ற ஒரே காரணததிற்காக "கேரளயூனியன்" அமைக்க முயலும்போது, திருவாங்கூர்த் தமிழ் மக்கள் தமிழ் நாட்டில் இணைய விரும்பும் நெடுநாளைய கோரிக்கை நிறைவேற வில்லையே என்று துடிப்பதும், அதற்காக அறப்போர் தொடுப்பதும் நியாயமான விளைவுகள் தாமே! சென்ற ஏப்ரல் 13ல் சென்னை மாகாணத்துடன் தென் திருவாங்கூரைச் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, தி. த. நா. காங்கிரஸ் அறப்போர் தொடங்கியது. சட்டசபை உறுப்பினர்கள், தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் அறப்போரின் முன்னணியில் நின்றனர். திருவாங்கூர் அஞ்சல் தலையும், கெஜட்டும் எரிக்கப்பட்டன; "திருவாங்கூர் ஆட்சி நம் ஆட்சிஅல்ல" என்று முரசறைந்தனர்; பின்பற்றும் தொண்டர்கள் எண்ணற்றவராயினர். வழக்கப்படியே அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டது; தலைவர்களைச் சிறையிலடைத்தது; போலீஸ்காரர்கள் மனம் போனவாறு நடந்து கொண்டார்கள். எனினும் அறப்போர் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. இந்நிலையில் தோழர் காமராஜர் சர்தார்படேலின் தூதுவராய்ச் சென்றார்; எப்படியோ அறப்போரை நிறுத்தி விட்டார். அவ்வளவுதான். தமிழர் கோரிக்கைகளுக்குப் பரிகாரம் தேடித் தந்தாரா என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். இனியேனும் செய்வாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

மொழிவாரி மாகாணப்பிரிவினையென்ற பெரியபிரச்னையின் சிறுசிறு கிளைகள் பலஉண்டு. அவற்றில் ஒன்றுதான் திருவாங்கூர்த் தமிழர் துயரம். பீகாரில் மான்பூம் மாவட்டத்தில் நிகழும் இந்தி எதிர்ப்புப் போரை நாம் இதனோடு ஒப்பநோக்கலாம். எப்படி இருபது லட்சம் தமிழர்கள் மலையாள ராஜ்யத்தில் அகப்பட்டுக்கொண்டார்களோ, அப்படியே பீகார் மாகாணத்தில் அதாவது இந்தி பேசும் மாகாணத்தில் வங்காளி பேசும் மக்கள் வாழும் மான்பூம் பிரதேசம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே 'இந்தியைப் படி' என்று வங்காளியைச் சொல்கிறார்கள். இங்கே 'மலையாளம் படி; தமிழ்ப் படிக்கப் பள்ளிக்கூடம் கிடையாது' என்கிறார்கள். எனவேதான் இரண்டு இடத்திலும் அறப்போர்களும் கிளர்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இந்தச் சிக்கல்களை உடனுக்குடன் கவனித்து நீக்காவிட்டால் நாட்டிற்கே ஆபத்து என்பதை 'ஆளும் பெரியவர்கள்' இன்னும் சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை.

எனவேதான் திருவாங்கூர்த் தமிழர்களின் கோரிக்கைகள் வெற்றியடையவில்லை; தோழர் காமராஜர் வேண்டுதலுக்குப்

பணிவது இப்போது இரண்டாவது முறை! அடுத்த முறையும் இப்படிப் பூசி மெழுக இயலுமா? கேரள யூனியன் இனனும் மூன்று மாதத்தில் உருவாகிவிடப் போகிறது; ஆனால் மொழிவாரிப் பிரிவினையோ காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் அப்போதுதான் தி. த. நா. காங்கிரஸின் கோரிக்கை ஒரு வேளை நிறைவேறலாம். இந்த இடைக்காலத்தில் இருபது லட்சம் தமிழர்களின் வாழ்வுக்கு உறுதி என்ன? திருவாங்கூர் ஆட்சியிலேயே அவர்கள சிறுபான்மையினர்; கொச்சியும் சேர்ந்த அமைப்பில் அவர்கள் மிகச் சிறுபான்மையினர் ஆய்விடுவர். அப்படியானால் அவர்கட்கு கிடைக்கப்போகும் இடைக்கால நிவாரணம என்ன? "பரிகாரம் தேடவேண்டியவர்கள் டில்லியிலிருக்க, திருவாங்கூர் சர்க்காரோடு ஏன் வம்பு?" என்கிறார் காமராஜர். டில்லியோ சமஸ்தானத்தின் ஒரு பகுதியை இந்திய யூனியனில் இணைப்பது இயலாது எனகிறது: சமஸ்தானங்கள் மறைந்தால்தான மொழிவாரி காகாணம் சாத்தியமெனகிறது. இக்குழப்ப நிலையில் திருவாங்கூர்த் தமிழர்களின் வாழ்வு ஊசலாடுகிறது. திருவாங்கூர்ப் பிரதமரோ, அறப்போர் நிபந்தனையின்றி நிறுத்தப்பட்டதென்றும், தமிழர் காங்கிரஸ் இந்தியாவின எந்த ஸ்தாபனத்தோடும் இணைக்கப்பட்டதல்லவெனறும் வெந்தபுண்ணில் வேல் நுழைக்கும் விதமாகப் பேசியிருக்கிறார். எனவே மீண்டும் நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் தங்கள் வாழ்விற்கு வழி காணத் தங்கள் பலத்தையே முழுக்க முழுக்க நம்பிப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை யென்று கூறவிரும்புகிறோம்.





காலமும் கருத்தும்

புரட்சிக்கவிஞர் விழா

வரும் ஏப்ரல் 29-ல் தமிழகத்தின் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்க்கு 59-வது பிறந்த நாள் விழாவாகும். தமிழர் தம் முற்போக்கிற்குத் தனமான இயக்கம் பெரும் பங்கு தொண்டாற்றியிருக்கிறதென்பதில் யாரும் வேறுபடுவதில்லை; அஃதே போன்று தமிழ்ப் புத்திலக்கியத்தின் வளர்ச்சியிலும் பெரும் பங்கு தொண்டு தன்மான இயக்கம் செய்திருக்கிறதென்பதற்குச் சான்று புரட்சிக் கவிஞரின் காவியங்கள். புற்றீசல் போன்று நூல்களும், காவியங்களும் வெளிவரும் இந்நாட்களில் 'சத்தான இலக்கியம்' இயற்றிய பெருமை பாரதிதாசனார்க்கே உண்டு அவர்தம் கவிதைகளின் தெளிவும், இனிமையும், செறிவும் மீண்டும் சங்க காலம் தொடங்குகிறதென்று கூறும் படியாகவே அமைந்திருக்கின்றன. பொய் புனைந்துரைகள், புராணக் கற்பனைகள், வடமொழிக் கலப்பு இவற்றிற்குப் புரட்சிக கவிஞர் முற்றுப் புள்ளி வைத்துவிட்டாரென்றே கூறலாம். எதிர்காலம் புரட்சிக் கவிஞரை ஏற்றிப் போற்றி மகிழும் என்பதில் நமக்கு ஐயமேயில்லை. எனினும் அவர்தம் வாழ்நாளில், தமிழ் மக்கள் அவர் வழங்கியுள்ள கவிதையின்பத்தைக் கருதி மகிழும வாய்ப்பாகவே "புரட்சிக் கவிஞர் விழா" வருகிறது. தமிழக மெங்கணும் விழாச் சிறபபாகக் கொண்டாடப்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

உடுமலை ஆர்ப்பாட்டம்

திராவிடப் பெருந்தலைவர் பெரியார், தம் தள்ளாத வயதிலும், மக்கள் நலமே தம் நலம் என்று கருதி ஊர் ஊராகச் சென்று கழகத் திட்டங்களை எடுத்து விளக்கிச் சொற்பொழிவாற்றி வருகிறார்; அவ்வரிசையில் உடுமலைப்பேட்டையிலும் சொற்பொழிவாற்ற இருந்தார். ஆனால் அங்கே உள்ள அதிகாரிகள் 144 உத்தரவு பிறப்பித்தார்கள்; 'பெரியார் பேசினால் கலகம் வரும்' என்று கற்பனை செய்து கொண்டார்கள். முந்தின நாட்களில் கோவையிலும் தாராபுரத்திலும் பேசும் போது குழப்பம் ஏதும் நிகழ்ந்ததா என்று கூட அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை. அல்லது கழகத் திட்டம, பிரசாரமுறை இவற்றின் பயனாக மாகாணத்தில் எங்கேனும், இதுவரையில் குழப்பம் நிகழ்ந்திருக்கிறதா என்று பார்த்திருந்தால் கூட அவர்கள் இவ் 'வினோத' முடிவுக்கு வந்திருக்க மாட்டார்கள். அனைவரும் எதிர்பார்ப்பது போல 144 மீறப்பட்டது. பெரியார் தம திட்டப்படி பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். போலீஸ் கைது செய்தது; ஜாமீனில் வெளியே போகலா

மென்றது; பெரியார் மறுக்கவே தம் பொறுப்பிலேயே நள்ளிரவில் விடுதலை செய்தது. இந்த ஆர்ப்பாட்டமும் வேடிக்கையும் அவசியந்தானா? தமிழ் நாட்டின் நிகரற்ற தலைவரிடமா தங்கள் அதிகாரத்தைக் காட்டுவது உடுமலை அதிகாரிகள்? சென்னை அரசினர் இத்தகைய 'குட்டிக் கலகங்கள்' இனிமேலும் நிகழா வண்ணம் கவனிப்ப ரென்று நம்புகிறோம்.

தமிழ்த் திருநாள்

தமிழ் வளர்ச்சிக் கழகம் இரண்டாவது தடவையாகத் தமிழ்த் திருநாள் நிகழ்ச்சிகளைத் திருவாரூரிலே நடத்தியிருக்கிறது. அங்கே பேசியோரில் பெரும்பாலோர் அந்நகரின் தெய்வீகத் தன்மை பற்றி வானளாவப் புகழ்ந்தனர். அத்துடன் சைவசமயம் தமிழ் வளர்த்ததையும் புகழ்ந்து போற்றினர்; முன் காலக் கதை இப்போது வேண்டாம். இப்போது தமிழ் வளர்ச்சி சமய அடிப்படையிலோ, சமயச் சார்பிலோ நிகழ்வது கூடாது; இயலவும் இயலாது. வீணாகச் சமயத்தை மொழியோடு ஒட்டுவதால் மொழி வளர்ச்சி குன்றுவதோடு, பிறசமயத்தவரின் வெறுப்பு நோக்கிற்கும் உள்ளாக நேரிடுகிறது. அதனால் தான் புரட்சிக் கவிஞர் "சமயமெனும் சூளையிலே தமிழ் நட்டால் முளையாது" என்று குறிப்பிட்டுள்ளார்; தமிழ் வளர்ப்போர் பார்வைக்கு இக்கருத்துக்களைக்கூற விரும்புகிறோம்.



வம்பு மடம்

—ஆண்டி—

திருவாரூரில் இரண்டு நாட்கள் நடைபெற்ற தமிழ்த் திருநாளில் விஞ்ஞானப் பகுதியைத் தொடங்கிவைக்க டாக்டர் ராஜனை அழைத்திருக்கிறார்கள்; அவருக்கு ஒரு சந்தேகம், தாம் ஒரு விஞ்ஞானி அல்லவே, தம்மை ஏன் அழைத்திருக்கிறார்கள் என்று. என்றாலும் பணியை ஏற்றுக்கொண்டு திருவாரூருக்கு வந்தார். அங்கே சென்றால் விஞ்ஞானிகள் உணவின்றி வாழ ஏதாவது வழி கண்டுபிடித்திருக்கிறார்களா என்பதையாவது தாம் தெரிந்து கொண்டு வரலாமல்லவா? இப்படி எண்ணிக்கொண்டு அந்த உணவு மந்திரி திருவாரூர் வந்திருக்கிறார்; தன் வருகையின் நோக்கத்தையும் வெளியிட்டு விட்டார்; ஆனால் அவர் எண்ணம் மட்டும் என்னவோ கைகூடவில்லை. இப்படியெல்லாம் டாக்டர் ராஜன் சிந்தனை செல்லும்படி நாட்டின் உணவுப் பிரச்னை அத்தனை பயங்கரமாயிருக்கிறது!

ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்னை மனத்தை அலைக்கழித்துக் கொண்டுதானிருக்கிறது. கம்பர் விழா நடத்தினார்களே, காரைக்குடியில், அவர்களுக்கும் தீர்க்க முடியாத பிரச்னை ஒன்று இருக்கத்தான் செய்தது. கம்பன் புகழை வளர்ப்பதைவிட அவர்கட்கு வேறு என்ன முக்கிய பிரச்னை இருக்கக்கூடும் என்று நீங்கள் வியப்படைவீர்கள்! அறிஞர் அண்ணாத்துரையின் "கம்பரசம்"தான் இத்தொல்லைகட்கெல்லாம் காரணம்- அதனை எப்படி ஒழிப்பது என்பதுதான் அங்கே கூடினோர்க்கெல்லாம் முக்கிய பிரச்னையாம்! விதவிதமான ஆலோசனைகள் கூறப்பட்டனவாம்! ஒரு கம்பனடியார் சொன்னாராம் "கம்பரசம்" புத்தகங்களையெல்லாம் வாங்கிக் கொளுத்தி விட்டால் போகிறதென்று! அருமையான யோசனை! உடனே செய்யுங்கள். காலதாமதம் சிறிதும் கூடாது.

என் நண்பர் ஒருவர் மிக அவசரமாக வந்தார்; "எனக்குத் திருமணம்; தாங்கள் அவசியம் வரவேண்டும்" என்று வாயினாலேயே அழைப்பு விடுத்தார்.

"ஏன்? என்ன வேடிக்கை பண்ணுகிறீர்? இரண்டாவது தடவை உமக்குப் பெண் கொடுத்துத் தண்டனையடைய எந்தப் புத்திசாலி முன் வந்திருக்கிறான்?" என்றேன். அவருக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது. இப்போது சட்டப்படி இருதாரமணம் குற்றமல்லவா? அவருக்கு அதைச் சுட்டிக் காட்டினேன்.

"போங்காணும். பைத்தியக்கார மனிதர் நீர்! எல்லாம் சட்டத்தோடு சரி. பவளக்கொடி பார்த்தீரா நீர்?" என்று மற்றொரு வெடிகுண்டை வீசினார்.

"உம் திருமணத்திற்கும் பவளக்கொடி சினிமாவிற்கும் என்ன தொடர்பு? ஏன் திடீரென்று அங்கே தாவுகிறீர்?" என்று குறுக்குச் சால் ஓட்டிப்பார்த்தேன்.

"பவளக்கொடி அர்ஜுனனுக்கு எத்தனையாவது தாரம்?" என்று என்னை மடக்கினார்.

"ஓகோ! புரிகிறது விஷயம். பவளக்கொடி நாலாவது அல்லது ஐந்தாவது மனைவியாயிருக்கும்"

"சரி — எப்படியோ ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம்தானே! சட்டப்படி குற்றம் தானே!"

"சினிமாக் கதைதானே ஐயா?"

"நிறுத்துங்காணும். மதுவிலக்குச் சட்டப்படி, கள் குடிக்கும் காட்சிகளைச் சினிமாவில் காட்டாமல் தடுத்திருக்கும்போது, இருதாரமணத் தடைச் சட்டப்படி, அர்ஜுனன் பவளக்கொடியை மணக்கும் காட்சியையும் தடுத்திருக்க வேண்டுமல்லவா?"

"நீர் சொல்வது நியாயம்; நான் ஒப்புக்கொள்கிறேன். அர்ஜுனன் இருதாரமணத் தடைக்கு முதல் விரோதி. அதுவும் பரமாத்மாவே முன்னின்று அவனுக்கு இத்தனை திருமணங்களை நடத்திவைப்பது மிகக் கேவலம்" என்று சிறு பிரசங்கமே செய்துவிட்டேன்; அதற்குள் நண்பனைத் தேடிக்கொண்டு அவர் மனையாள் என் வீட்டிற்கே வந்துவிடவே நாங்கள் பிரிய வேண்டியதாயிற்று.

சென்னை பஸ் டிக்கட்டுகளுக்குப் பரிசு வழங்கப் போகிறார்களாம். நல்ல ஏற்பாடு. சென்னை பஸ்களில் பிரயாணம் செய்வோர் தாங்கள் செல்லவேண்டிய இடங்கட்குச் செல்வதோடு, தங்கள் 'அதிர்ஷ்டத்'தையும் பரிசீலனை செய்து கொள்ளலாம்! மேலும் தங்கள் அதிர்ஷ்டத்தில் அவநம்பிக்கை கொண்டவர்கள், வெளியே போக வேறு வேலை இல்லாவிட்டால் கூட, டிக்கட்டுக்காகப் பஸ்களில் பிரயாணம் செய்யலாம்! அந்த டிக்கட்டைப் பத்திரமாக வைத்திருந்து மறு நாள் பத்திரிகையை ஆவலுடன் பார்க்கலாம்! ஒவ்வொரு நாளும் குலுக்கில் வரும் டிக்கட்டுகளை வைத்திருப்போருக்குப் பரிசு கொடுப்பதோடு, அந்த டிக்கட்டை அந்த அதிர்ஷ்டசாலிக்குக் கொடுக்கும் பாக்கியம் பெற்ற கண்டக்டருக்கும், அந்த அதிர்ஷ்டசாலியை ஏற்றிச்செல்லும் பாக்கியம் பெற்ற பஸ்ஸை, ஓட்டிச்செல்லும் டிரைவருக்கும் சிறப்பாகப் பரிசுகள் வழங்கலாம். இப் பரிசுத்திட்டப்படி குலுக்கில் வெளிவந்த எண் டிக்கட்டை யாரும் கொண்டு வராவிட்டால் கனம் கோபால் ரெட்டியாரே அந்தப் பரிசை ஏற்றுக்கொள்ளலாம்! சென்னை வாசிகளே! சர்க்கார் பஸ்களில் பிரயாணம் செய்யுங்கள்; உங்கட்குப் பரிசு என்றாவது ஒரு நாள் கிடைக்கும்!

சென்னையில் சிலமாதங்கட்கு முன்பு முருகனைச் சேவிக்க வந்த சேவல் பற்றிப் பிரமாத விளம்பரம் செய்தார்களல்லவா? குருத்துவாரத்திலும் அத்தகைய அதிசயம் ஒன்று நாடோறும் நிகழ்கிறதாம்; அங்கே நடக்கும் சீக்கியர் பிரார்த்தனையில் தங்க நிறச் சிறகுள்ள பருந்தொன்றும் வந்து கலந்து கொள்கிறதாம்! இந்த அதிசயத்தைப் பார்க்க ஏராளமான பக்தர்கள் வருகிறார்களாம்! சென்னையில் சேவலைப் பார்க்க வரவில்லையா? பக்தர்களின் போக்கே விசித்திரம்! அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களின் அறிவின் "தரம்" மட்டும் ஒரே மாதிரிதானிருக்கும் போலும்!



என்னுடைய பையன்கள், மகள் வயிற்றுப் பேரக் குழந்தைகள் இவர்களுடன் மாலை நேரத்தில் அமராவதிக் கரையை நோக்கிக் கிளம்பினேன். குழந்தைகளிடமும் என்னிடமும் நாலைந்து பட்டங்கள் சிறிதும் பெரிதுமாக இருந்தன. குழந்தைகள் ஒரே குதியும் கும்மாளமுமாக என்னைச் சுற்றி வந்தன.

உத்தியோகத்திலிருந்து விலகி உபகாரச் சம்பளம் பெறத்தொடங்கி ஒருமாதமாகிறது. வெகுநாட்களுக்குப் பின்பு இப்போதுதான் சொந்தக் கிராமத்தில் திரும்பவும் நிரந்தரமாக வசிக்க வந்திருக்கிறேன்.


நாங்கள் பட்டங்களோடு ஆற்றுக்குப் போகும் காட்சியைப் பார்த்துப் பலர் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர். அதிகமான வயது சென்ற கிழவர் ஒருவர், என்னைச் சிறுபிள்ளையிலிருந்து அறிந்தவர், "ஏதப்பா, ஐந்தில் பிடிபடுகிற பழக்கம் ஐம்பதுக்குப் பின்னும் விடாது போலிருக்கிறதே!" என்றார் பொக்கைப் பல்லைக் காட்டியபடியே. அவருக்கு நான் சின்னஞ் சிறு வயதில் மொட்டை மாடியிலிருந்தும், பொட்டல் வெளியிலிருந்தும், வயல் காடுகளிலிருந்தும் பட்டம் விட்டு வேடிக்கை

நான் நடந்தேன். குழந்தைகள் இரைச்சலிட்டுக் கொண்டே வந்தன. கண்ணெதிரே அமராவதி தெரிந்ததும் என் நினைவு எங்கோ சென்றது.—எங்கோ என்ன? செல்லிபாளையத்து அமராவதிக் கரைக்குச் சென்றது. முப்பது வருடங்களுக்குப் பின்னே ஓடியது.

ஃ ஃ ஃ

ஆம்; முப்பது வருடங்களுக்கு முன்பு...செல்லி பாளையத்தில் என் சிற்றப்பா இருந்தார். இப்போதும் அவர் குடும்பம் அங்குதான் இருக்கிறது. அந்தச் சமயம் எனக்கு வயது இருபத்தைந்து. படிப்பு முடிந்து விட்டது. வேலைக்கு இந்தக்காலம் போல் அவ்வளவு நெருக்கடி இல்லை. சில மாதங்கள் சும்மா இருந்து விட்டுப் பிறகு வேலைக்குப் போகலாமென அப்பா சொன்னார்.

புத்தகங்கள் வேறு நிறையக் கைவசம் இருந்ததால் செல்லிபாளையத்தில் பொழுது ஒரு மாதிரியாகப் போயிற்று. குழந்தைகளும் ஒழிந்த வேளைகளில் தொல்லை கொடுத்து நேரத்தைச் சரிக்கட்டின. சாயந்திரக் காலத்தைச் செலவிட நான் என் பழைய வழியைக் கைப் பிடித்தேன். குழந்தைகளைச் சாக்காக வைத்துக் கொண்டு அழகான பட்டங்கள் கட்டிக்



..டேன். ஊருக்கும் அமரா வதிக்கும் அரை மைலுக்குமேல் இருக்கும்.

அமராவதியில் எப்போதுமே அதிக நீரைக் காணமுடியாது. வெள்ளம் வந்தால் ஒரு வாரத்தில் வற்றிவிடும். மற்ற நாட்களில் தெளிவாக மத்தியிலாவது, ஏதாயினும் ஒரு ஓரத்திலாவது வாய்க்கால் போல் ஓடிக் கொண்டிருக்கும்.

தோட்டத்துக்குப் பக்கத்தில் கருங்கற் பாறையில் உட்கார்ந்து கொண்டு நானும் குழந்தைகளும் பட்டம் விட்டுக் கொண்டிருந்தோம். பட்டம் உயரே, உயரே, உயரே சென்றது. காற்றும் அதற்குச் சாதகமாக அடித்தால் மள மளவென்று மேலே வானத்தில் முழுவதும் தீருமளவும் பட்டம் எகிறிப் பறந்தது. என்னை மறந்து நான் அந்தக் காட்சியில் ஈடுபட்டிருந்தேன்.

காற்று வாக்கில் வந்த அந்தத் தனிக்குரலும், அதைத் தொடர்ந்து எழுந்த சிரிப்பொலியும் என்னைக் கலைக்காமலிருந்தால் மாலை முழுவதும அப்படியே உட்கார்ந்திருப்பேன்.

“பச்சைக் குழந்தை பட்டம் விடுகிறதைப் பார்த்தீர்களா?' என்றது ஒரு பெண் குரல்.

அதைக் கேட்டு ஒரு கூட்டமே ‘கொல்’ லென்று நகைத்தது.

முதலில் கூறிய பெண் என் காதில் விழாதென்று அப்படிச் சொல்லியிருக்கிறாள். ஆனால்



ளுக்கு விரோதமாக இருந்திருக்கிறது. அது மாத்திரமில்லை. அவளுடைய தோழிகளே அவளைக்காட்டிக் கொடுத்து விட்டனர்.

நான் கோபத்தோடு திரும்பினேன். ஒரு முகம் மட்டிலும் வாட்டத்துடன் என்னைக் கண்டு கவிழ்ந்து கொண்டது. மற்ற பெண்கள் அனைவரும் அவளைப் பார்த்துச் சிரித்தனர். நான் எளிதில் புரிந்து கொண்டேன்.

அந்தப் பெண் துடுக்குக்காரி மட்டிலு மல்ல; ரோஷக்காரி; அங்கு இருந்த அனைவரிலும் அழகு ராணி. அந்த நட்சத்திரக் கூட்டத்திற்குத் தலைமை

என் கோபம் போன இடம் தெரியவில்லை. "ஏன், பெரிய பிள்ளைகள் பட்டம் விடக் கூடாதென்று இந்த ஊரில் சட்டமா?" என்று சிரித்தபடியே கேட்டேன். ஒருவரும் பதில் சொல்ல வில்லை.

வளைகள் குலுங்கித் தாளமிட்டன. வண்ண வண்ணமான சிறு ஊற்றுக்கள் அங்கே தோன்றின. ஊற்று நீரைக் குடத்தில் நிரப்பிக் கொண்டு அவர்கள் மெல்லிடையில் குடமேந்தி நடந்தனர். அந்தக் குறும்புக் காரி பயந்தபடியே என்னை ஒருமுறை திரும்பிப் பார்த்து நடந்தாள்.

நாட்கள் பறந்தன. பட்டமும் நாள் தவறாமல் அதிக உற்சா

சுருள் இப்போது அதிகம். கண்ணுக்குப் பட்டம் மறையும் வரையில் கூட அது சென்றது. —முதல் நாளைப் போலவே அந்த முழு நிலவும் அதைச் சூழும் நட்சத்திரங்களும் மாலை நேரத்தில் ஆற்றங்கரையில் உதயமாகத் தவறியதில்லை. எனக்கு என்னவோ அந்த நிலவின் ஒளி நாளுக்கு நாள் அதிகரிப்பதுபோல் இருந்தது. கிராமத்தில் பாலைக் கொட்டிக் கவிழ்த்த அந்தவானத்துப் பூரண சந்திரன் கூட, எனக்கு இதனுடன் ஒப்பிடும் போது பித்தளைத் தகடாகத் தான் தோன்றியது.

ஒருநாள் பட்டம் வெகு தூரம் சென்று விட்டதால் நூலை வேகமாகச் சுற்றிப் பட்டத்தை இழுத்துக் கொண்டிருந்தேன். பட்டத்தை அதிகமாக நோக்காமல் கயிற்றையே கவனித்துச் சுற்றினேன். நூல் சுற்ற முடியாமல் இறுகியது. பட்டத்தைப் பார்த்தேன். பட்டம் அவள் இடுப்புக் குடத்தை வளைத்துக் கொண்டிருந்தது! அவசரமாக எழுந்து ஓடினேன் "கயிற்றை அறுத்துவிடாதீர்கள்; இதோ வந்து விட்டேன்; நான் கவனிக்கவே இல்லை" என்று ஏதேதோ சொல்லிக் கொண்டே மெதுவாகப் பட்டத்தை — அவளையுந்தான் — விடுவித்தேன். சுற்றிலுமிருந்த பெண்களுக்கு இதைக் கண்டு ஒரு கும்மாளம்.

"நன்ருய் வேண்டும் சுந்தரி, நீதானே அவரை முதல்நாள் வம்புக்கிழுத்தாய்" என்ருள் ஒருத்தி.

பெயர் சுந்தரி என்று அப்போதுதான் தெரியும்.

பிறகு சில தினங்கள் ஆற்றுக்குச் சுந்தரியைக் காணேம். என் பட்டமும் அதிக உயரம் பறக்கவில்லை. ஒரு வாரம் சென்ற பின் ஓர் இரவு என் வீட்டிற்கெதிரே காரில் சென்ற கல்யாண ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தேன். அதில் மணப் பெண்ணுய்த் தலையைக் கவிழ்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் சுந்தரி. மனம் முதல் கணம் 'திக்'கென்றது. மறுகணம் சாவதானமாக ஓடியது. அருகில் இருந்த மாப்பிள்ளையைக் கவனித்தேன். சுந்தரிக் கேற்ற சுந்தரன் தான். இதில் எனக்கு ஒரு திருப்தி. கலக்கத்தின் தெளிவில் ஏற்பட்ட திருப்தி-

இதெல்லாம் முப்பது வருடங்களுக்கு முன்பு......

ஃ ஃ ஃ

ஐம்பத்தைந்து வயசுக் கிழவனுகிய நான் இன்று எங்கள் ஊர் ஆற்றங்கரையில் உட்கார்ந்து 'குஷாலாய்ப்' பட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். செல்லிபாளையத்தில் ஓடிய அதே அமராவதிதான் இங்கும் ஓடுகிருள். அங்கு கருங்கற் பாறைகள் உண்டு. இங்கு மணல் திட்டுகள். இதுதான் வித்தியாசம். மற்றபடி எல்லாம் ஒரே மாதிரிதான்.

நான் அங்கு வந்து உட்கார்ந்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் என்னுடைய பெரிய பையனும் வந்துவிட்டான். அவனுக்கும இப்போதுதான் படிப்பு முடிந்தது. விவசாயம் படித்திருக்கிருன். இருக்கிறநிலபுலங்களை ஒழுங்காகக்கவனிக்க அவன் உதவினுல்போதும்.

பேரக் குழந்தை தன்னுடைய பட்டம் தண்ணீரில் விழுந்துவிட்டதென்று கத்திஞன். பெரிய பையன் அதை

மெதுவாக நீரிலிருந்து எடுத்து மணலில் போட்டான். அப்போது அங்கே சில பெண்கள் நீரெடுக்க வந்திருந்தனர். வயதான ஒரு அம்மா பட்டத்தை எடுத்துச் சென்ற என் பையனிடம் என்னவோ பேசினுள். பையனும 'ஆம்' என்று தலையசைத்தான். அவர்கள் பேச்சைக் கேட்ட நான் அந்தப் பக்கம் திரும்பினேன். என் கண்கள் நிலைகுத்தி விட்டன. அங்கே சுந்தரி, முப்பது வருடங்களுக்கு முன்பு பார்த்த அதே வயதில் நின்றுகொண்டிருந்தாள்! என் கண்கள் அந்தப் பெண்ணை விட்டு அகல மறந்தன. அதே சுந்தரி, அதேவயதில் இங்கு எங்கே வந்தாள்?

பையன் வந்து விபரம் கூறினன். "நீ அந்தப் பெரியவரின் பையனு?" என்று அந்த அம்மாள் கேட்டாளாம்.

"ஆம்" என்ருனும்.

அந்த அம்மாளை நான் பார்த்தபோது, நான் முன்பு நோக்கிய சுந்தரி "அம்மா, நாழியாகலையா? வீட்டிற்குப் போக வேண்டாமா?" என்று அந்த அம்மாளுக்கு நினைவூட்டினுள். எனக்கு எல்லாம பளிச்சென்று விளங்கிவிட்டது.

நானே எழுந்து அருகில் சென்றேன்.

"என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? பெண் உங்கள் குழந்தையா? அவளைப் பார்த்தவுடன்தான் உங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது" என்றேன்.

"அதைப் போலவேதான் உங்கள் பையனும், உங்கள் பட்டமும்தான் எனக்கு உதவியாக இருந்தார்கள். இன்னும் அந்தப் பொழுது போக்கை விடவில்லையா?" என்ருள் சிரித்துக்கொண்டு.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே என் பெரிய பையனும் அந்தப் பெண்ணும் கண்களால் ரகசியக் கதைகள் சொல்லிக்கொண்டார்கள். இதை நானும் லேசாகக் கவனித்தேன். அந்த அம்மாளும கவனித்தாள்.

"உங்கள் பெண்ணுக்கு இன்னும கல்யாணம் ஆகவில்லையே?" என்றேன் நான்.

"இல்லை; உங்கள் பையனுக்கு?" என்ருள் உடனே.

"இனிமேல்தான்;— அதைத்தான் அவர்கள் இருவருமே நிச்சயம் செய்துவிடுவார்கள் போலிருக்கிறதே" என்றேன் மெதுவாகச்சிரித்துக்கொண்டு.

சுந்தரியும் சிரித்தாள்; ஆற்றங்கரை அரசமரமும் சிரித்தது; பையனும் பெண்ணும் தலையைக் கவிழ்த்துக் கொண்டனர். ○

திருமணம்

இவளூர்த் தோழர் என். ராமாநுஜம் — ரெங்கநாயகி திருமணம் 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் 7—4—49 அன்று சீர்திருத்த முறையில் நிகழ்ந்தது. அவ்வமயம் தோழர்கள் ராஜையா, கல்யாண சுந்தரம், முத்துப்பேட்டை சாமினுதன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மணமக்களுக்கு நண்பர்களால பரிசுகளும் பாராட்டுரைகளும் வழங்கப்பட்டன.

பொன்னி

வரி விளம்பரங்களுக்கான விகிதம்
(RATES FOR CLASSIFIED ADVTS)

நன்றியறிவிப்பு, திருமணம், தேவை, விற்பனை, இயந்திரம், முகவரி மாற்றம், பிறப்பு, புத்தகங்கள், மற்றும் வியாபாரச் சிறு விளம்பரங்கள்

வரி ஒன்றுக்கு அணா 8

4 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூ. 2

C/O முகவரி கொடுத்தால் திருப்பி அனுப்ப விளம்பரம் 1-க்கு அணா 8

தேவை

சினிமாவில் நடிக்க ஆர்வமுள்ள புதிய நடிகர்கள் நடிகைகள் தேவை. விபரங்களுக்கு 2 முக்காலணா ஸ்டாம்பு அனுப்பவும். இன்ப நிலையம் சங்கர்நகர், புதூர், மதுரை

நல்ல நிலைமையிலுள்ள தமிழ் டைப்ரைட்டர் ஒன்று தேவை. டைப் அடித்த மாதிரியுடன் விலை விபரமும் எழுதுக பொன்னி அலுவலகம், புதுக்கோட்டை.

அனுப்புங்கள்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைக் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள். பதில் வேண்டுவோர் 2 அணா தபால் தலையுடன் எழுதுங்கள். D. R. சந்திரன், 391, கீழ 4-ம் வீதி, புதுக்கோட்டை

பத்திரிகை

கரும்பு - சிறந்த மாத இதழ் விலை 4 அணா. எங்கும் ஏஜண்டுகள் தேவை. முருகன் நிலையம், புதுக்கோட்டை.

முத்து சிறுவர்களின் சிறந்த வார இதழ் வெள்ளிதோறும் வெளிவரும். முதல் இதழ் 3-6-49ல் வெளிவருகிறது. எங்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. தபால் பெட்டி எண் 39, புதுக்கோட்டை

திருமணம்

மாதம் ரூ 80 வருமானம் உள்ள இராணுவத்தில் பணியாற்றும் சோ குல வேளாளர் இளைஞருக்கு 8-வது வகுப்பு வரை படித்த, திராவிடக்கழகக் கொள்கைகளை அனுசரிக்கும் அழகுள்ள மணமகள் தேவை. சீர்திருத்தப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளல் வேண்டும். ஜாதியைப் பற்றிக் கவலையில்லை. விபரங்கட்குப்புகைப் படத்துடன் இம் முகவரிக்கு எழுதுக. S/M K. Palaniswamy, Radio Mechanic, 45 LAA RIA Signal Section, Range Hill Lines, JHANSI

மாதம் 60 ரூபாய் வருமானம் உள்ள கோனார் இளைஞருக்கு ஓரளவு படித்த அழகுள்ள மணமகள் தேவை. சீர்திருத்த திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஜாதியைப்பற்றி அக்கரையில்லை. விவரங்கட்கு: சுப்பிரமணியன், 5660-61 சாந்தநாதபுரம் முதல்வீதி, புதுக்கோட்டை

விற்பனை

3/4" நாகக் குழாய் கிடைக்கும் தேவையுள்ளோர் விலை விபரங்கட்கு எழுதுக. S S. யூசுப் வாட்ச் கம்பெனி, மேராஜவீதி புதுக்கோட்டை

புதிய வெளியீடு

பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்
ஆசிரியர்: எஸ். சதாசிவம், தலைவர், கவிஞர், தளபதி ஆகியோரின் மூன்றிறப் பட மேலட்டையுடன் கூடிய நல் விருந்து. விலை அணா 8. செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை

விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் நமது "பொன்னி" க்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. பிரதி 1-க்கு ரூ. 1/- முன்பணம் கட்ட வேண்டும்

- விருத்தாசலம்
- தஞ்சாவூர்
- இராமநாதபுரம்
- மேட்டூர் அணை
- தனுஷ்கோடி
- அம்பாசமுத்திரம்
- இராசிபுரம்
- சீர்காழி
- அரியலூர்
- சென்னிமலை

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

5. திருடன்

உலகத்தில் நீதியில்லை, நியாயமில்லை என்று ஒரு பக்கம் மக்கள் கதறிக்கொண்டிருக்கிருர்கள். இன்னும் சட்டமும் நீதிமன்றமும் இருந்துகொண்டுதான் வருகின்றன. ஆயினும் தண்டனையளிப்பது சட்டப்படிதானே யொழிய, நீதிப்படியல்ல என்பது வெட்டவெளிச்சம். நேற்று வழக்கு மன்றம் போயிருந்தேன். அங்கே ஒரு நிகழ்ச்சி இதை மெய்ப்பித்துவிட்டது.

கூண்டிலே நிறுத்தப்பட்டிருந்த குற்றவாளி அழகாக மயிரை வாரிவிட்டிருந்தான். நல்ல பட்டுச் சட்டை அணிந்திருந்தான். ஐந்து மோதிரங்கள் அவன் கைவிரல்களை அலங்கரித்தன. உயர்தரமான கைக்கெடியாரம் ஒன்று அவனை உயர்குடி மகனுகக் காட்டியது. அவன் கண்களிலே ஏளனம்-தண்டனையைப்பற்றிய அலட்சியம் - இவைகள் விளையாடிக் கொண்டிருந்தன. திருட்டுக் குற்றம் சாட்டப்பெற்ற அவன் சர்வ சாதாரணமாகவே கீழ்க் கண்டவாறு நீதிபதியைக் கேட்டான்.

''கோர்ட்டார் அவர்களே! என்னைப் பார்த்தா திருடனென்று கூறுகிறீர்கள்? என்னைப் பார்த்தால் திருடன் போலவா தோன்றுகிறது? நன்ருகப் பாருங்கள்! நானு திருடன்?''

ஜட்ஜ் ஒரு சாந்த சொரூபி. அவனிடம் மிகவும் வேடிக்கையாக உரையாடினர். பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டார். அந்த உரையாடலை அப்படியே கீழே தருகிறேன். பிறகு கூறுங்கள், நான் கூறியது தவறு சரியா என்று.

"கோர்ட்டிலே பொய் பேசக்கூடாது. நீ சத்தியம் செய்திருக்கிருய்"—இது நீதிபதி.

"இதற்குநியாயஸ்தலம்என்ற பெயர்தானே ஒழிய, இங்கு நீதியேது? நியாயமேது? உண்மைக்கு இடமேது?"

"கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு நீ குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்ருய் என்பதை நினைவில் வைத்துக்கொள்!"

"ஒப்புக்கொள்கிறேன். ஆனல் நான் ஏன் திருடினேன்? எதற்காகத் திருட வேண்டும்? எப்படித் திருடனுக்கப்பட்டேன்? என்னைத் திருடும் நிலைக்கு ஆளாக்கிய இரக்கமற்ற சமுதாயத்திற்கு நீங்கள் தரும் தண்டனை என்ன? அதை நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"அதிகப் பிரசங்கம் வேண்டாம், நீ திருடியது உண்மை தானே?"

"ஆமாம்".

"வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிருயே! உனக்குச் சூடு சுரணை கிடையாதா? பெரிய மனிதன்போல் அலங்காரம் செய்துகொண்டிருக்கிருயே!"

"சூடு சொரணையா? அவைகள் என்னிடம் ராஜிநாமாச் சீட்டு எழுதிக்கொடுத்தது இருபது வருடங்களாகின்றன".

"ஏன் திருடினாய்?"

"எதற்காகத் திருடுவார்கள்?"

"திருடினால் தண்டனை உண்டு என்று தெரியுமா?"

"அது தெரியாமலா திருடுவார்கள்?"

"இது மானங்கெட்ட பிழைப் பல்லவா?"

"இல்லை என்று யார் சொன்னது? மானத்தோடுதான் வாழ நினைத்தேன். இந்த மானங் கெட்ட உலகந்தான அதற்கு வழி வகுத்துக் கொடுக்கவில்லை. சுயமரியாதையோடு வாழ நினைத்த என்னை இந்தச் சொரணை கெட்ட சமுதாயம் சோற்றுக்காகத் திண்டாட வைத்தது. திக்கற்ற அநாதை என்று கூறி வேலை தருமபடி பலரை வேண்டினேன். வீணர்கள்! நான திக்கற்றவன் என்ற காரணத்திற்காக, முன்பின் என்னைத் தெரியாது என்று சொல்லி விரட்டி விட்டனர். பட்டாளத்திலே சேர்ந்து சேவை செய்ய நினைத்தேன். உடற்கட்டு இல்லை யென்று மறுத்துவிட்டார்கள். சொந்த வியாபாரம் செய்யலாமென்றாலோ, இருக்கின்ற மூலதனம் உடுத்தியிருந்த கந்தலும் கையில்லாத சட்டையுந்தான். இந்த நிலைமையில் பிச்சை எடுப்பதைத் தவிர, வேறுவழி இல்லாததால் இந்தத் தொழிலில் இறங்கிவிட்டேன்."

"ஏன், பிச்சை எடுத்திருக்கலாமே?"

"அதுவும் மானங்கெட்ட பிழைப்புத்தானே! சோளத் தட்டைபோல் இருந்தாலும் சோற்றுத் தடியன என்று பட்டஞ் சூட்டிவிடுகிறார்கள்"

"இத்தனை திருட்டுகள் செய்வதற்கு உனக்குத் துணிச்சல் அதிகம் இருக்க வேணடும்."

"ஆரம்பத்தில் பயமாகத் தானிருந்தது. பிறகு 'பிராக்டீஸ்' ஆகிவிட்டது."

"எப்படி?"

"நான் திருடுவதை யாரும் கவனிப்பதே இல்லை. நான திருடியதற்காக அவர்கள் தினையளவும் கவலைப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. பிறகுதான் தெரிந்துகொண்டேன், பெரிய பெரிய கனவான்கள் திருடுவதெல்லாம், நம்போன்ற சிறிய திருடர்களுக்குத் திருட்டுக் கொடுக்கத்தான் என்பதை. வியாபாரி திருடுகிறான்; பூசாரி திருடுகிறான்; சர்க்கார் ஊழியர்கள் திருடுகிறார்கள். இந்த எல்லாத் திருட்டுகளையும் மறைப்பதற்காக, அதாவது மக்கள் தெரிந்துகொள்ளாமலிருப்பதற்காக எங்களைப் போன்ற கதியற்றவர்களைத் திருடும் நிலைக்குக் கொண்டு வந்து, திருட்டுக் கொடுத்து, திருடன் என்ற பட்டஞ் சூட்டித் தண்டித்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்."

"அடேயப்பா! உனது முதல் திருட்டு எது?"

"தபாலாபீஸ் அருகே உட்கார்ந்திருந்தேன். ஒரு கனவான் 'ராலே' சைக்கிளில் வந்து இறங்கினர். வண்டி புத்தம் புதிது. அந்த அநியாய வெயிலிலே அநாதையாகக் கிடந்த வண்டி என்னைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது. நானே சாப்பிட்டு நான்கு நாட்களாகின்றன. மறு நிமிடம் அந்த இடத்திலிருந்து கிளம்பினேன். இரண்டு நாள் கழித்து அந்த வண்டி ஒரு சைக்கிள் கம்பெனியில் நின்றது. என் கையில் ரூபாய் நூறு இருந்தது."

"எப்படி விற்ருய்?"

"சர்க்கார் ஸ்டாம்பு ஒட்டி ரசிது கொடுத்திருக்கிறேன்."

"இத்தனையும் செய்துவிட்டுக் கண்ணியமாக ஒப்புக்கொள்கிருய். உன்னை விடுதலை செய்தால்............"

"மறுபடியும் திருடுவேன். ஏனென்ருல் நானும் உயிர் வாழவேண்டுமல்லவா? தண்டனை கொடுப்பதென்ருல் ஆயுள் முழுவதும் தண்டனை கொடுங்கள். இல்லையென்ருல் தூக்குமேடையேற்றி என் உயிரைத் துண்டித்து விடுங்கள். இல்லையெனில் மீண்டும் நான் திருடும்போது, ஏன் திருடினுய் என்று கேட்கக் கூடாது!"

"ஏன்?"

"ஏனென்ருல் திருடர்களைக் கூட்டிவந்து, அவர்களை இன்னும் 'திருடு; திருடு!' என்று தட்டிக் கொடுப்பதனுல்தான்."

"எப்படி?"

"திருடர்களைப் பிடித்து வந்து இரண்டு வருடம் தண்டித்துவிடுவதனுலேயே அவன் திருந்தி விடுகிருன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனுல் அவன் விடுதலையாகி வெளி வந்த பின்பும், கையில் காசில்லாத காரணத்தால், திருடன் என்ற சொல் நெற்றியிலே நன்ருகப் பொறிக்கப்பட்டு விட்டதால், அவன் மறுபடியும் திருட ஆரம்பிக்கிருன். திருடனுக்கு யார் வேலை தரப்போகிருர்கள்?"

"அவன் மறுபடியும் திருடினுல் அதற்கு நாங்கள் என்ன செய்வது?"

"நீங்கள் தானே அவனை உலகத்திற்குத் திருடனென்று அறிமுகப்படுத்தி வைத்தீர்கள். ஆகவே சர்க்காரிலேயே திருடனுக்கு வேலை கொடுத்தால் அவன் திருடுவானு? திருடன் ஜெயிலைவிட்டு வெளியே போனுலும் திருடனுகவே திரிவான்."

குற்றவாளியின் பேச்சுத் திறமைக்கு மெச்சிக் கொண்டார் நீதிபதி. ஆனுலும், அவர் சட்டம் என்ற இருட்டறைக்குள்ளேவெளிச்சத்தைக் காண முடியவில்லை. சட்டம்! சாம்ராஜ்யத் திருடர்களுக்குச் சாதகமாக எழுதி வைக்கப்பட்ட ஓர் ஏடு. அது சாதாரண இந்தத் திருடனுக்கு ஐந்து வருடம் கடுங்காவல் தண்டனை தந்தது.

வணக்கம்,
வழிப்போக்கன்

சிலப்பதிகாரக் காட்சிகள்

வி. சு. திருநாவுக்கரசு

6. காவலன் போலும் கோவலன்

மாதவியை விட்டுப் பிரிந்த கோவலன் கண்ணகியை நினைத்துத் தன் இல்லம் நோக்கி வருகிறான். அப்பொழுது மாலைப்பொழுது வரவே பூம்புகாரின் ஒரு பகுதியான பட்டினப்பாக்கத்தில் இல்லங்கள் தோறும் மகளிர் மணிவிளக்கேற்றினர். தம் காதலரை மகிழ்விக்க எண்ணிப் பகற்போது அணிந்த ஆடையை மாற்றி இரவுக்குப் பொருந்திய புதிய ஆடைகளை மகளிர் அணிந்து தம்மை ஒப்பனை செய்து கொண்டனர்.

அகனக ரெல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல் மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி இரவிற் கோர்
கோலங் கொடியிடையார் தாம் கொள்ள...

இவ்வரிகளில் தமிழ் நாட்டின் மிகச் சிறந்த பண்பாட்டை நாம் காணுகிறோம். இரவிற்கோர் கோலம் கொள்ளுகின்ற கொடியிடையார் முன்னாளிலுமிருந்தனர். இன்றைய நாகரிகம் பண்டைய நாகரிகத்தினும் எவ்வாறு உயர்ந்ததாகுமோ நாமறியோம். இரவிற்கோர் கோலம் என்று கூறுகிறார். கோலம் என்பது உடுத்துதல், புனைதல் ஒப்பனை செய்தல் மூன்றாலும் பொருந்தும். மெல்லிய ஆடை, மெல்லிய அணிகலன், கவரத்தக்க ஒப்பனை ஆகிய இவை இரவு வரக் காதலனை மகிழ்விக்கின்றன.

இரவிற்கோர் கோலம் கொள்ளும் மகளிர் கூட்டத்தில் கண்ணகி கண்ணீர் வடித்து வந்தாள். ஆடையும் அணிகலனும் ஒப்பனையும் கணவர் பொருட்டே என அவள் நினைத்த காரணத்தால் வாடிய இயற்கை அழகோடு வாழ்ந்து வந்தாள். தேவந்தி என்ற தோழி அவள் படும் துன்பங் கண்டு 'நின் கணவனை விரைவில் அடைவாய்' என்று கூறினாள். அது கேட்ட கண்ணகி 'உன் வாய்ச் சொல் பலிக்கப் போவது உண்மைதான். என்றாலும் நேற்றிரவு நான் கண்ட கனவை நினைத்தாலும் ஐயோ நெஞ்சும் நடுக்குகிறது. கணவர் வந்து என் கையைப் பிடித்து உடனழைத்துப் போகக் கண்டேன். ஊரைவிட்டு வேறு ஊருக்குப் போகிறோம். அவ்வூரார்

பொருந்தாத பழியொன்றை என் மீது சுமத்தினர். அதனால் கணவருக்குப் பெருந்தீங்கு வந்தது. அரசன் முன் சென்று அறியாத நான் முன்சென்று வழக்காடினேன். அதனால் அரசனும் அவன் நகரமும் தீமையுற்றன. இவ்வாறு துன்பமடைந்த நான் கணவனோடு அடைந்த சிறப்பினைக் கேட்டால் நீ நகையாடுவாய். ஆகையால் நான் மேலே சொல்ல மாட்டேன்' என்று கூறினாள். கேட்டதோழி 'கண்ணகி, நீயோ கணவனால் வெறுக்கப்பட்டவளுமல்ல. கணவன் பொருட்டுக் காக்க வேண்டிய நோன்பு ஒன்றை முற்பிறப்பில் நீ செய்யத் தவறி விட்டாய். அதனால் வந்த தீங்கு நீங்குவதாக. காவிரி கடலொடு கலக்கும் சங்கமத் துறையிலே சோம குண்டம், சூரிய குண்டம் என்ற இரண்டு புண்ணியப் பொய்கைகள் உண்டு.

அவற்றின் துறைகளில் மூழ்கிமன்மதன் கோயிலை அடைந்து வழிபட்டால் மகளிர் தம் கணவரைப் பிரியாதிருந்து இவ்வுலகத்தில் மகிழ்வர். மறுமையிலும் கணவரோடு இன்புறுவர். ஆகையால் நாமொருநாள் போய் நீராடி வருவோம்' என்று கூறினாள்.

அது கேட்ட கண்ணகி 'அவ்வாறு நீராடித் தெய்வம தொழுவது எங்கட்கு இயல்பல்ல' என்று கூறி மறுத்துவிடுகிறாள்.

.... பொற்றொடிஇ
கைத்தாயு மல்லை கணவற்கொரு
நோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில்
போய்க்கெடுக உய்த்து
கடலொடு காவிரி சென்றலைக்கும்
முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானல்
தடமுள
சோமகுண்டஞ் சூரியகுண்டந்
துறைமூழ் கிக்
காமவேள் கோட்டந் தொழுதார்
கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத்
தையலார்
போகஞ்செய் பூமியினும்
போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுதும் என்ற அணியிழைக்கவ்
ஆயிழை யாள்
பீடன்(று) எனவிருந்த
பின்னர் ....



தம்முடைய வைதீக மதக் கோட்பாடுகளைப் பிறர்மீது நளினமாய்ப் புகுத்துவதில் பிராமணர்கள் வல்லவர்கள் என்பதை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. அல்லாமலும் ஆடவர்களைப்போலவே அவரகத்து மகளிர்களும் அதில் வல்லவர்கள் என்றும் காட்டுகிறது. தோழியாகிய தேவந்திதன்னையும்உளப்

படுத்திக்கொண்டு 'யாமொரு நாள் ஆடுதும்' என்று கூறுவதில் அவளது திறம் நன்ருய் வெளிப்படுகிறதல்லவா?

தன்னை மணந்த கணவனினும் மற்ருெரு தெய்வம் இல்லை என்பது தமிழர் கோட்பாடு. இது திருவள்ளுவர் வகுத்த அறம். தெய்வம் தொழாள், கணவனையே தொழுவாள் என்று கூறுகிருர். கணவனையே தொழுவாள் என்று ஒன்றைக் கூறிய அளவிலே அவர் விட்டிருக்கலாம். தொழமாட்டாள் என எதிர்மறைப் பொருளாலும் வலியுறுத்துகிருர். சாதாரணமாய்ச் சொல்வதானுல் ஒன்றையேகூறலாம். வற்புறுத்த வேண்டுமானுல் எதிர்மறையாலும் கூறலாம். சட்டம் இவ்வாறு தான் கூற முடியும். இதையே ஒரு காவியம் எப்படிக் கூறும் என்று பார்க்க விரும்பினுல் அதைச் சிலப்பதிகாரம் இங்கே

'...... .... யாமொருநாள்
ஆடுதும் என்ற அணிஇழைக்கவ்
ஆயிழையாள்
பீடன்று'

கற்புடைக் கண்ணகியோ 'அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வம தொழுதல் எங்கட்கு இயல்பன்று' என்று கூறுகிருள். தோழியின் மனம் நோவாமலும்—தன கொள்கை நழுவாமலும் கதை போகும வேகத்தில் 'பீடன்று' என்ற ஆற்றல் வாய்ந்த மறுமொழி ஆணித்தரமாய் விழுந்து விடுகிறது. இது காவியக்கதை அமைப்பில் தான் முடியும்.

பின்னர்.

கண்ணகியிடம் 'இளந்தோழியொருத்தி ஓடிவருகிருள். அரசனைப் போலும் ஒருவர் நம் வீட்டருகே வந்துள்ளார். அவர் நம் கோவலரே என்று கூறுகிருள். சேய்மையில்கண்டபோது அரசனே என்ற ஐயம அணிமையில் வந்ததும் தெளிந்து போகிறது.

அவள் சொல்லி முடிவதற்கு முன்னே கோவலனே அங்கு வந்துவிட்டான். நேராகப் பள்ளியறையிற் புகுந்தான். கண்ணகியின் வாடியமேனியை வருந்திய உள்ளத்தைக் கண்டான. "இவை யெல்லாம் வஞ்சம் பொருந்திய பொய்யான ஒருத்தியோடு கூடி வாழ்ந்த காரணத்தால் நேர்ந்தன. முன்னேர் தேடிவைத்த மலைபோலும் செல்வமெல்லாம் கரைந்து



டிரைவர்: கார் ஓடாதுங்க; காற்று அடிக்கவேண்டும்.

முதலாளி: ஏன் அப்பா, முன்பே சொல்லக்கூடாது? சரி, கடற்கரை ஓரமாச்சும் நிறுத்து. காற்று அடிக்கட்டும்.

போயின. இதனால் வந்த வறுமை எனக்கு நாணத்தை உண்டாக்குகிறது'' என்று கூறினான். இவ்வாறு கூறியதை மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாது கூறிய தாய் நினைத்த கண்ணகி தன் முகத்திலே புன்முறுவலை உண்டாக்கிக்கொண்டு 'இன்னும் இரண்டு சிலம்புகள் என்னிடம் உள்ளன. அவற்றைக் கொள்ளுங்கள்'

நலங்கேள் முறுவல்
நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மென ......

என்று கூறுகிறாள். இந்த வரிகளில் கண்ணகியின் பண்பட்டுப்போன உள்ளத்தையே காட்டுகிறார் இளங்கோ, தவறான ஒழுக்கத்தை மேற்கொண்ட கணவன், மணந்த மனைவியை மறந்தவன், மனைவி அழுது துடிக்க நாளும் மற்றொருத்தியொடு மகிழ்ந்து வாழ்ந்தவன். அவனை நேராகக் கண்ட மனைவியிடம் வசவு தவிர வாழ்த்தையோ வணக்கத்தையோ காண நினைக்கவும் முடியுமா? சிரித்த முகமும் ஏந்தியசிலம்புமாய்க், கணவன் முன்னே நிற்கும் கண்ணகியாரைப் பெண்டிர் குலத்தின் மேலான பேறெனவே சொல்லவேண்டும். சிலம்பு தவிர ஏனைய செல்வமெல்லாம் போய்விட்டதை இளங்கோ நுணுக்கமாய்ப் புலப்படுத்துகிறார்.

கோவலன் தன் நிலையை இப்பொழுதுதான் அறிந்துகொண்டான். கண்ணகியை நோக்கி 'இச் சிலம்பை முதலாகக் கொண்டு இழந்த பொருளையெல்லாம் ஈட்டுகிறேன். அதற்குப்பொருந்திய ஊர் மதுரையேயாகும்: என்னுடன் நீயும் வருக. நீயும் எழுக. பொழுது புலர்வதற்கு முன் நாம் செல்லுவோம்' என்று கூறினான்.

... ...

சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச்
சென்ற கலனோடு
உலந்தபொருள் ஈட்டுதல்
லுற்றேன் மலர்ந்தசீர்
'மாடமதுரை அகத்துச்
சென்றுஎன் னோடிங்கு
ஏடலர் கோதாய் எழுக.

இவ்வாறு கோவலன் கூற இளங்கோ அடிகள் இதற்குக் காரணம் கூறுகிறார்.

முற்பிறப்பில் கோவலன் செய்த தீவினை நெடுங்காலம் நெஞ்சில் பழுவாய் இருந்து வந்தது. அது வெளிப்படும் காலம் வரவே அது இட்ட கட்டளைக்குக் கோவலன் பணிகிறான் என்று கூறுகிறார்.

கணவன் கூறியன கேட்ட கண்ணகி மறுக்காது, மறுசொல் பேசாது புறப்பட்டாள்.

பாரதிதாசன் பரம்பரை

காதற் பூங்கா!

கன்னி யொருத்தி குதித்து வந்தென்
கன்னத்தில் முத்தம் இட்டாள்—அவள்
தென்னை மரத்தி லிருந்து விழுந்தவோர்
தேன்துளி யென்று கண்டேன்.

புன்னை மரத்தில் கிளைக ளெல்லாம்
பூவைச் சொரிந்து நின்ற!—அவை
பொன்னை நிகர்த்த ஒருத்தி சூட்டிய
பூவார மென்று கொண்டேன்.

வண்ணக் கிளியொன்று பண்ணிசைத்தே
வண்டமிழ் பேசியிருக்க—அதைப்
பெண்கட் கரசி என்றன் காதலி
பேச்சென் றெண்ணி வியந்தேன்!

இன்னும் அருகில் இலந்தை தனிலோர்
எழிற் குருவியைக் கண்டேன்—அது
என்னிற் கலக்கப் பாய்ந்திடும் கண்ணினைக்
கிமைகள் என்று நின்றேன்.

[சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த நண்பர் க. பரமசிவன் பாரதிதாசன் பரம்பரையினர்; கற்பனை நயமும் சொல்லினிமையும் "காதற்பூங்கா" கொண்டிலங்குகிறது — ஆசிரியர்]





வாழ்க்கைச் சந்தை

வ. சம்பந்தன்

அன்று காலை எழுந்திருக்கும் பொழுதே மணி ஏழரை ஆகிவிட்டது. வேறு ஒன்றுமில்லை. இரவு இரண்டாவது ஆட்டம் சினிமாப் பார்த்ததன் விளைவுதான். வேண்டாம் என்றால் விடுகிறார்களா நண்பர்கள்! கல்லூரி டிசம்பர் விடுமுறைக்காக மூடப்பட்டிருந்தது. சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமே, படிக்க வேண்டுமே, கல்லூரிக்குப் போக வேண்டுமே என்ற கவலை சிறிதும் இல்லாதிருக்கும்போது தூக்கம்தான் 'என்ன ஜோராக வருகிறது தெரியுமா? ஏழு மணிக்கே தூக்கம் கலைந்துவிட்டது. ஆனாலும் தூக்கம் கலைந்த பிறகும் அப்படியே கொஞ்ச நேரம் படுக்கையில் புரண்டுகிடப்பதே தனி ஆனந்தம்! யாரோ மெத்தைப்படிக்கட்டுகளில் ஏறிவரும் சப்தம் கேட்டது. தூங்குகிற மாதிரி கண்களை மூடிக்கொண்டேன்.

"சித்தப்பா, கீழே வந்து பாரேன். யார் வந்திருக்கிறார்கள் என்று" என்று, கூச்சல் போட்டுக்கொண்டே ஓடிவந்தாள் கமலா.

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டே, அவளிடம் "காலமகாத்தாலே யாரம்மா வந்திருக்கா?" என்று கேட்டேன்.

"கோயம்புத்தூரிலிருந்து பார்வதி அக்கா இல்லே-அந்த அக்கா இன்னும் எல்லாம் வந்திருக்கிறார்கள். நீ வேண்டுமானால் வந்துதான் பாரேன்"- இதைச் சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள் கமலா.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது போலிருந்தது. என் அரைத் தூக்கம், சோம்பல் எல்லாம் எங்கோ பறந்தோடி விட்டன. 'பார்வதி வந்திருக்கிறாளா?' என்றால் நம்பவே முடியவில்லை. என் ஒவ்வொரு நரம்புகளிலும் இந்தப் புது அதிர்ச்சி பட்டுத் தெறிக்க ஆரம்பித்தது. கொஞ்சமாவது, சிறிதளவாவது, எதிர்பார்த்திருந்தால்தானே நம்புவதற்கு? ஆனால், அதற்காக எதிர்பாராத சம்பவங்கள் வாழ்க்கையில் நேருவதில்லையா? பாக்கப் போனால் - இந்தச் சின்னஞ் சிறு திகைப்புகள்-அதிர்ச்சிகள்-திடீர்ச் சம்பவங்கள்-இவைகள் தாமே நம்

முடைய வாழ்க்கைக்குக் கொஞ்சம் மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றன!'

படுக்கையைவிட்டு எழுந்தேன். அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு — மெத்தையிலிருந்து இறங்கினேன். மனத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி, ஒரு இறுகிறுப்பு - தூக்குமேடையை நோக்கிச் செல்லும் குற்றவாளியைப்போல்-உண்டாகியது.

அண்ணன் என்னைப் பார்த்ததும் "கண்ணு, பார்த்தாயா யார் வந்திருக்கிறார்கள் என்று. கிறிஸ்மஸுக்காகப் பார்வதியெல்லாம் வந்திருக்கிறார்கள். வந்தவர்களை 'வாங்கள்'என்று கூப்பிட வேண்டாமா?"என்று எனக்கு அறிவுறுத்தும் தோரணையில் கூறினார்.

"இவர்தான் பார்வதியின் கணவர்" என்று அண்ணு பார்வதியின் கணவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அவரைக் கையெடுத்து வணங்கி "வரவேண்டும். வருகிறேமென்று லெட்டர் போட்டிருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்போமே" என்று என்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, அவருக்கு வரவேற்புக் கூறினேன்.

"திடீரென்று புறப்பட்டோம். அதனால் லெட்டர் ஒன்றும் போட முடியவில்லை. லெட்டருக்கென்ன, நாங்களே தான் வந்துவிட்டோமே" என்று கூறிக் கலகலவென்று சிரித்தார்.

நான் அவரைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை. நல்ல கட்டுமஸ்தான உடல். பார்த்த உடனேயே 'நல்ல மாதிரி' என்று சொல்லிவிடலாம்.

"கண்ணு, போய்க் கைகால் சுத்தம் செய்துகொண்டு வா. காப்பி சாபபிடலாம்" என்று அண்ணன் கூறவே — பிரஷை எடுத்துக்கொணடு குழாய்க்குச் சென்றேன். ரொம்பவும் அசாதாரணமான நிலையிலிருந்தது என் மனம். இன்னும் பார்வதியைப் பார்க்கவில்லை: அவளை எப்படிப் பார்ப்பது? எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளை வரவேற்பது? அப்படி இப்படிப் பல் தேய்த்துக்கொண்டே — முகத்தைத் துண்டால் துடைத்துக்கொண்டே நடைக்கு வந்தேன். நான் யாரை எப்படி வரவேற்பது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தேனே, அதே பார்வதி-இடுப்பில் குழந்தையுடன் என் எதிரே வந்துகொண்டிருந்தாள். நான்கு வருடங்களுக்கு முன் பார்த்த அதே பார்வதிதான். ஆனல் அப்பொழுது இருந்த 'குறுகுறு' பார்வை இல்லை. அமைதியும் பொலிவும் குடிகொண்டிருந்தன முகத்திலே. பட்டுச் சேலை சலசலக்க-இடுப்பில் குழந்தையுடன் பொற்சிலைபோல் அவள் காணப்பட்டாள். எனக்குப் பேச்சடைத்துப் போயிற்று. வந்த விருந்தாளியை 'வா' என்று கூப்பிடக்கூட மறந்து போய்ப் பிரமை பிடித்தவன் போல் நின்றேன்.

"என்ன கண்ணு! என்னுடைய கல்யாணத்திற்குத் தான் வராமல் இருந்து விட்டீர்கள். வீடு தேடி வந்தாலும் 'வா' என்று கூப்பிடக்கூட

முடியாமல் போய்விட்டதா? அப்படி என்று தெரிந்திருந்தால் இங்கே வந்தேயிருக்க மாட்டேனே" என்று கூறிக் கலகல வென்று சிரித்தாள்

எனக்கு என்னவோ போலிருந்தது. ஒருவாறு மனச்கொந்தளிப்பை அடக்கிக்கொண்டு "அப்படி யெல்லாம் ஒன்று மில்லை. கூப்பிடத்தான் வாயெடுத்தேன். அதற்குள் நீயே பேசி விட்டாய். சௌககியம் தானே? இவள் தான் உன்னுடைய சம்யுக்தா ராணியோ" என்று கூறிக்கொண்டே குழந்தையை வாங்க அருகில் போனேன்.

"ஆம், கண்ணு! இவள் தான் எங்கள் சம்யுக்தாராணி. ரொம்பவும் கெட்டிக்காரி. அதோடு ரொம்ப ஞாபகக்காரியும் கூட" என்று கூறிக்கொண்டே குழந்தையை என் கையில் கொடுத்தாள்.

எனக்குச் 'சுருக்' கென்றிருந்தது.

"நீங்கள் போய்க் காப்பி சாப்பிடுங்கள். அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இதோவந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுச் சமையற் கட்டை நோக்கிச் சென்றாள் பார்வதி.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு கூடத்திற்கு வந்தேன். அண்ணுவும் அவரும் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன சித்தப்பா, அதற்குள் நீங்களும் சம்யுக்தையும் என்ன அவ்வளவு 'பிரண்ட்ஸ்' ஆகிவிட்டீர்களா?" என்று கமலா என்னைக் கேலி செய்தாள்.

நாங்கள் எல்லோரும் காப்பி சாப்பிட்டு விட்டு எழுந்தோம். அண்ணு என்னைப் பார்த்து, "இதோ, பார் கண்ணு! நீதான் இவர்களுக்கு வேண்டியதெல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும். பத்து நாள் லீவில் வந்திருக்கிறார்கள். பட்டணம் முற்றும காட்டிவிட வேண்டும்" எனறு சொல்லி விட்டு அவர் பக்கம் திரும்பி "மேலே போய்க் கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள் ஸார். கண்ணு, அழைத்துக்கொண்டு போ" என்றார்.

குழந்தை சம்யுக்தையைத் தூக்கிக்கொண்டே, அவரை,— பார்வதியின் கணவரை - மேல் மாடியில்உள்ள என் அறைக்கு அழைத்துக்கொண்டு வந்தேன்.

"கொஞ்சம் படுக்கிறீர்களா?"

"இல்லை அப்படிக் கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் படுக்கலாமென்று. தாங்கள் என்ன படிக்கிறீர்கள்?"

"எகனுமிக்ஸ் ஹானர்ஸ்"

"மகிழ்ச்சி. நீங்கள் கல்யாணத்திற்கு வரவில்லை யென்று எல்லோருக்கும் ரொம்ப வருத்தம். உங்கள் அண்ணனும் அண்ணியும் ரொம்ப ஒத்தாசையாய் இருந்தார்கள். உங்களைப் பற்றியும் உங்கள் வீட்டாரைப் பற்றியும் சம்யுக்தையின் அம்மா பேசாத நாளே கிடையாது. மனிதனுக்கு மனிதன் எதைப்புரட்டிக்கொடுத்து விடப்போகிறான்? அன்புதான் பெரிது. தாங்கள் தான் கோயம்புத்தூரையே மறந்து விட்டீர்கள். நானும்சென்னைக்கு வரணும்/என்று ரொம்ப நாட்க

ளாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தேன். ஏதாவது ஒரு காரியம் வந்து தலையிட்டு இந்தப்பயணம் தள்ளிக் கொண்டே வந்தது. 'இங்கே வரவேண்டும். அக்கா வீட்டிற்குப் போகவேண்டும். பட்டணம போக வேண்டும்' என்று சம்யுக்தையின் அம்மா ரொம்பவும் தொந்தரவு செய்து விட்டாள். கடைசியில் இப்பொழுது தான் ஒழிந்தது. நான் எத்தனையோ தடவை பட்டணம் வந்திருக்கிறேன். ஆனால் அவளுக்கு இது தான் முதல் தடவை. எல்லா இடங்களையும் அழைத்துக் கொண்டு போய்க்காட்டிவிட வேண்டும். உங்களுக்கு லீவாக இருப்பது எங்களுக்குச் சௌகரியமாகிவிட்டது'' என்று கூறி முடித்தார்.

"அதற்கென்ன, அப்படியே ஆகட்டும்'' என்றேன்.

"நான் கொஞ்சம் அப்படிப் படுக்கிறேன். சம்யுக்தா அம்மா வந்தால் சம்யுக்தையை அவளிடம் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தார். சில நிமிடங்களில் அயர்ந்து தூங்கிவிட்டார்.

"என்ன விசித்திர உலகம் இது! பலவித சூழ்நிலைகள் உண்டாகி, நம்முடைய வாழ்க்கையைத் தான் எவ்வளவு பெரிய புதிராக்கி விடுகின்றன! நாம் சற்றும் எதிர்பாராதவெல்லாம் நடைபெறுகின்றன. நான் யாரை உயிருக்குயிராக நேசித்தேனோ – யாருக்காக நான் உயிர் வாழ்கிறேன் என்று எண்ணியிருந்தேனோ – அதே பார்வதியைத் தொட்டுத் தாலி கட்டின கணவர் இப்பொழுது என்னுடைய அறையிலே படுத்து உறங்குகிறார். நான் கொஞ்சமாவது எதிர்பார்த்தேனா! குழந்தை சம்யுக்தையைத் தூக்கி மேஜை மீது உட்கார வைத்தேன். பார்வதியை அப்படியே உரித்து வைத்தது போலிருந்தாள் சம்யுக்தை. அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பழங்காலச்சரித்திரம் படம் பிடித்துக் காட்டப்படுவது போல் என் மனக் கண் எதிரே தோன்றியது.

O

..............சிறு வயது முதற்கொண்டே என் அண்ணனின் பராமரிப்பில் வளர்ந்தவன் நான். தாய் தகப்பன் இரண்டு பேரும் இறந்துபோகவே குடும்ப பாரம் அண்ணன் தலையில் விழுந்தது. நல்லகாலம். நாங்கள் இரண்டுபேர் தான் அண்ணன் தம்பிகள். பி. ஏ. படித்துவிட்டு அண்ணன் — வருமான வரி ஆபீசில் இன்ஸ்பெக்டராக இருந்தார். அண்ணனுக்கு மதுரையிலிருந்து திடீரென்று கோயம்புத்தூருக்கு மாற்றலாகியது. ஆகவே நாங்கள் கோவைக்குப் போக வேண்டியதாயிற்று. கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் திடீரென்று குடியிருக்க வீடு கிடைக்கிறதா என்ன? அப்படி இப்படிக் கஷ்டப்பட்டுக் கடைசியில் வீடு கிடைத்தது. அந்த வீட்டின் சொந்தக்காரர் நீடூழி வாழ வேண்டும்! வீடு கிடைக்காத காலத்தில், தன்னுடைய வீட்டிலேயே கொஞ்சம் இடம் ஒழித்துக்கொடுத்தார் என்பதோடு — அவர்தான் பார்வதியின் தகப்பனார் என்பதும் ஒன்று. டவுனில் அவருக்குப் பெரியஜவுளிக்கடை இருந்தது. அந்தப் பெரிய வீட்டில் அவர்,

அவருடைய மனைவி, ஒரே மகள் பார்வதி—இவர்கள் தாம் இருந்தார்கள். நாங்களும் கொஞ்சபேர்கள் தாம். ஆகை யால் வீடு சற்று சௌகரிய மாகவே இருந்தது. நான் கோவையிலேயே சீனியர் இண் டர்மீடியட்டில் சேர்ந்தேன். வந்தகொஞ்ச நாட்களிலேயே எங்கள் இரு குடும்பங்களும் ரொம்பவும் நெருங்கிப் பழகின குடும்பங்களாகி விட்டன. மேலும் பார்வதியின் அம்மா ரொம்ப நல்ல மாதிரி. பார்வதி மட்டும் என்ன? அப்பொழுது அவளுக்கு வயது சுமார் பதி னைந்து இருக்கும். ஆறுவது பாரத்தில் படித்துக்கொண்டி ருந்தாள். வந்த சில நாட்களி லேயே என்னுடைய அண்ணி யும், பார்வதியும் மனமொத்த நண்பர்களாகி விட்டார்கள். பள்ளிக்கூடம் போய் வந்த நேரம் போக எப்பொழுது பார்த்தாலும் என்னுடைய அண்ணியைச் சுற்றிக் கொண்டே இருப்பாள். லீவு நாள் வந்து விட்டால் கேட்க வேண்டியதேயில்லை. ஒரே ஆர்ப் பாட்டம் தான்!


முதலில் உண்மையாகவே எனக்குக் கொஞ்சம் பயம், எப் படி ஒரு அயல் வீட்டுப் பெண் ணிடம் பேசுவதென்று. ஆனால் காலக் கிரமத்தில் அவள் என்னை உன்னிப்பாகக் கவனிக் கின்ற பார்வையும் — அவளு டைய நடவடிக்கைகளும் — எனக்குச் சாதகமாகவே தோன் றின. கண்டபடி கிடக்கும் என் அறை இப்பொழுதெல்லாம் — மிகவும் சுத்தமான முறையிலே காணப்பட்டது. எல்லாம் பார் வதியின் வேலைகள். வர வர அவள் விஷயத்தில் எனக்குச் சிரத்தை அதிகமாகியது. அவளை நுணுக்கமாகக் கவ னிக்க ஆரம்பித்தேன்.

அன்று. அப்படித்தான் ஒரு நாள் கல்லூரியிலிருந்து வர



நரமாகிவிட்டது. "கண்ணா! ன் இவ்வளவு நேரம்? இன்று ார்வதியின் வீட்டில் ஏதோ விசேஷமாம். அருமையான டபன். நீ நேரத்தில் வந்து ாப்பிடவில்லையே என்று அந்த அம்மாள் ரொம்பவும் வருத்தப் பட்டார்கள். பார்வதி துடித்துப் போய்விட்டாள்," ன்று வந்ததுமே அண்ணி உறினாள்.

"ஒன்றுமில்லை அண்ணி. ாலேஜிலே இன்று ஒரு மீட் ங்" என்று சொல்லிவிட்டு டபன் சாப்பிட உள்ளே நுழைந் தன். ஆனால் அண்ணி சொன்ன அந்த வார்த்தைகளை றக்கவே முடியவில்லை. நான் டபன் சாப்பிட நேரத்தில் வர வில்லையென்று பார்வதி துடித் துப் போவதாவது! நான் யார்? அவள் யார்? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்! எனக்கு இது புதிராகவே இருந்தது' பார்த்துப் பழகி



முதியவர் : என்னப்பா, மணி! பார்க்காமல் போறியே, வெள் ளெழுத்தா?

இளைஞன் : தயவு செய்து மன் னிச்சிக்குங்க. நான் மணி இல்லே.

இரண்டு மாதங்கள் கூட ஆக வில்லை. அதற்குள்ளாக......! "பெண்கள் மனம் ஒரு புதிர். ஆழங்காண முடியாத கடல் மேலே அமைதியாகத் தோன்றி னாலும், உள்ளே ஒரே குமுற லும், கொந்தளிப்பும் தான்" என்று சொல்கிறார்களே, அது உண்மை தான்!

பேசாமல் டிபனை சாப்பிட்டு விட்டு வெளியே போகலா மென்று புறப்பட்டேன். ஆனால் மனம் மட்டும் 'மக்கார்' செய்து கொண்டேயிருந்தது. உண்மை யாகவே என் மீது பார்வதிக்கு அன்பு உண்டா? அல்லது பழ கின் தோஷத்தின எதி ரொலியா இது? என் மனம் கிந் திக்க ஆரமபித்தது. எப்படியா வது அவளிடமே இதைப் பற்றிக் கேட்டுவிட வேண்டும். உண்மையைத்தெரிந்து கொள் ளாவிடில் மனத்திற்குச் சமா தான மேது? அலை மோதும் உள்ளத்துடன், அவளுடன் பேசத் துடித்துக் கொண்டிருந் தேன். ஆனால் சந்தர்ப்பமே கிடைப்பது அரிதாக இருந் தது. தனியாக ஒரு வயதுப் பெண்ணிடம், எவ்வளவு தான் பழகினாலும், எப்படிப் பேசு வது? அதுவும் வீட்டிலிருப்ப வர்கள் என்னவாவது நினைத் துக் கொண்டால்?

அன்று ஒரே தலைவலியாக இருந்தபடியால் — காலேஜில் லீவு போட்டுவிட்டு — சீக்கிர மாகவே வீடுவந்தேன். வீட் டின் கதவு தாழ்ப்பாள்போட் டிருந்தது. கதவைத் தட்டி னேன். கதவு திறக்கப்பட் டது. கதவைத் திறந்தவள் பார்வதி! எனக்கு ஒரே ஆச் சரியமாகிவிட்டது. அவளும் பிரமை பிடித்தவள்போல் நின்

ருள். ஒருவாறு மனத்தைச் சமாளித்துக்கொண்டு "ஏன், பார்வதி பள்ளிக்கூடம் போக வில்லையா?" என்றேன்.

பதில் வரக் கொஞ்ச நேரம் பிடித்தது. "போனேன். இன்று மத்தியானம் கிளாஸ் கிடையாது" என்ருள். ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டே உள்ளே வந்தேன். வீடு வெறிச்சென்றிருந்தது. அண்ணியைக் காணோம். எனக்குத் திக்கென்றது. "பார்வதி, அண்ணியெல்லாம் எங்கே?" என்றேன.

"அக்கா, அம்மா எல்லோரும் நகைக்கடைக்குப் போயிருக்கிருர்கள். இதோ வந்துவிடுவார்கள். தாங்கள் வந்தால் டிபன் கொடுக்கச் சொன்ஞர்கள்" என்று கூறிவிட்டுச் சமையலறைப் பக்கம் ஓடினுள். நான் கைகால் அலம்பிக் கொண்டு வருவதற்குள் ஒரு தட்டில் உப்புமாவும், டம்ளரில் காப்பியும் கொண்டுவந்து என் மேஜைமீது வைத்திருந்தாள். பேசாமல் சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவிக் கொண்டு, வெளியே போகலாமென்று கிளம்பினேன்.

கதவண்டைகூட வந்திருக்க மாட்டேன்.

"கண்ணு!" என்று பார்வதி கூப்பிட்ட மாதிரி இருந்தது.

"ஏன், பார்வதி, கூப்பிட்டாயா?" என்று திரும்பினேன்.

"ஆம்! மன்னிக்கவும். உங்களிடம ஒரு விஷயம் கேட்க வேண்டும். இந்தப் படிப்பு முடிந்ததும் பட்டணம் போய் விடுவீர்களாமே படிக்க, நிஜமாகவா?"—தட்டுத் தடுமாறிப் பேசினுள் அவள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. எதற்காக இந்தக் கேள்வியை அவள் கேட்க வேண்டும்? உண்மையாகவே என்னிடத்தில் இவ்வளவு அக்கரையா அவளுக்கு? அவளை உற்று நோக்கினேன். சித்திரப் பதுமைபோல் நின்ற அவள் கண்களில் நீர் சொரிந்து கொண்டிருந்தது. எங்களுடைய உள்ளங்களை—ஒருவரை ஒருவர்—மிகவும் நன்ருகத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது அன்று. தைரியத்துடன் அவள் அருகில் சென்று, அவளுடைய கண்களைத் துடைத்து அவளுக்கு ஆறுதல் கூறினேன். களங்கமற்ற அவள் வெள்ளை உள்ளத்தை எனக்கு மிக நன்ருகத் திறந்துகாட்டினுள் அன்று!

அதற்கப்புறம்! அதற்கப்புறம் என்ன? பார்வதி என் மனமொத்த சிநேகிதி. அவளுடைய களங்கமற்ற சுந்தர வதனம் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது தெரியுமா? எங்கள் அன்பு நாளுக்கு நாள் வளர ஆரம்பித்தது. கடைசியில் நான் இண்டர்மீடியட் தேறி மேல் படிப்புக்காகச் சென்னை வரும்பொழுது—ஒருவரை ஒருவர் ஒரு நிமிடமும் பிரிக்கமுடியாத அளவிற்கு எங்கள் அன்பு எங்களைப் பிணைத்து விட்டது.

கடித்துத் தின்று விடலாமா என்ற கன்னங்கள். மோகன லாகிரி பேசும் விழிகள். இவைகளை எவ்வாறு

மறப்பேன் என்று நொந்து கொண்டே—என் பயணத்திற்கான சாமான்களைத் தயார் செய்து கொண்டிருந்தேன். அடக்கமுடியாத வேதனையால் என் உள்ளம் குமுறியது. எப்படிப் பார்வதியைவிட்டு இருக்கப்போகிறோம் என்பதை நினைக்கும் பொழுது என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. பார்வதி அறையினுள் நுழைந்தாள். எனக்கு ரொம்பவும்வேதனையாய்ப்போய் விட்டது. அவளே பேசினாள் "கண்ணா! நீங்கள் நன்றாகப் படித்து—முன்னுக்கு வரவேண்டும். நல்லபடியாக இருக்க வேண்டும். ஆனால் அந்த அமர்க்களமான சென்னை வாழ்க்கையிலேயே உங்களின் பல அலுவல்களுக்கிடையே என்றாவது ஒருநாள் 'நம்முடன் பழகினாள் ஒரு வருடம் பார்வதி. நம்மேல் உயிரையே வைத்துக் கொண்டிருப்பவள் ஒருத்தி இருக்கிறாள்' என்று இந்த அபலையைப்பற்றி ஒரு நிமிடம் தங்கள் உள்ளம் நினைத்தால் அதுவே எனக்குப் போதும்" என்று கூறி நிறுத்தினாள்.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உணர்ச்சிப் பெருக்கால் 'என்ன சொல்கிறாய் பார்வதி! உன்னை மறந்துவிடுவதா! சத்தியமாக இந்தப் பிறவியில் அது இல்லை. இது சத்தியம்" என்று அவள் கையைப் பிடித்துச் சத்தியம் செய்துகொடுத்தேன்.

விம்மும் உள்ளத்துடன், சோகத்தைக் கக்கும் இரு கருவிழிகள் வழி அனுப்பச் சென்னைவந்து சேர்ந்தேன்.

[அடுத்த இதழில் முடியும்]

அஞ்சா நெஞ்சன்

"அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி" என்று 15 ஆண்டுகளுக்கு முன் வீரக் கழல் அணிவித்தார் காலஞ்சென்ற கிழப்புலி பண்டிதமுத்துசாமி. சந்தேகமென்ன? அழகிரி அஞ்சா நெஞ்சனே; அடலேறுங் கூட! ஆனால் அந்த நெஞ்சமுத்தக்காரனது ஆவியையும் இயற்கை குடித்து விட்டதே! 1949 மார்ச் 28 திங்கள் பகல் பொழுதோடு பட்டுக்கோட்டை அழகர் சாமியைப் பாதுகாக்க முடியாமல் பறிகொடுத்து விட்டது திராவிட சமுதாயம்! அழகிரி மறைந்தான்! ஆறடி உயரம் ரோமானியரின் உடற்கட்டு—அறிமுகமில்லாதாரைப் பிரமிப்பு கொள்ளச் செய்யும் நீண்டமுக விலாசம் -தாம்பூலக்காவி படிந்த புன்முறுவல்—துள்ளும் அதரவாய்—இந்த கம்பீரத் தோற்றம் அளித்து வந்த அழகிரிசாமியை இனிக்காண்பதேது? "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பார்கள். நோஞ்சையாயினும் பிள்ளை மீதுள்ள பாசத்தால் "ராஜ கம்பீரன்" என்று ஆசைப் பெயரிட்டு அழைப்பது பெற்றோர்வாஞ்சை அந்தச் சம்பிரதாயத்தில் 'அஞ்சா நெஞ்சன்' என்று அழைக்கவில்லை அழகிரிசாமியை. அவனது உருவக விரிவே ஓர் வீரச் சின்னம். இயல்பான உறுதிபட்ட மனவலிமை — அச்சமற்ற பேச்சுத் தோரணை —மலையே பிளந்து சரிந்தாலும் வானமே இடிந்து விழுந்தாலும் கலங்காத இரும்பு நெஞ்சு—அனைத்தும் ஒன்று கலந்து அஞ்சா நெஞ்சனாக ஆக்கிக் கொடுத்தன அழகிரிசாமியை. பண்டித முத்துசாமிப் பிள்ளை அந்த உண்மையைக் கண்டறிந்து சொன்ன 'பாஸ்வல்.'

—மணவை திருமலைசாமி



உலகத்தை விலைபேசி
உரிமையினை நாட்ட
அலைகின்ற பெரியாரில்
அன்னாரும் ஒருவர்!
சிறந்திருக்கும் பொருள்கள்தமைச்
சொந்தமென ஆக்கி
சீர்பாட வாழ்ந்திடவே
எண்ணுகின்ற உளத்தார்!
சொன்னபடி கேட்பதற்கு
ஆட்கள் பலருண்டு!
சுறுசுறுப்புக் கொடுப்பதற்கோ
பணம் நிறையவுண்டு!
இன்னும் என்னவேண்டுமையா
எண்ணியதை முடிக்க?
எடுத்ததெலாம் வெற்றியென
இறுமாந்திருந்தார்!

ஃ ஃ ஃ

கஞ்சிக்குப் பாடுகின்ற
ஒருபுலவன் ஒருநாள்
கையிலுள்ள வீணையினால்
உள்ளத்தை உருக்கிக்
கருத்தழுந்தப் பாடுவதைக்
கனவானும் கேட்டார்!
இன்னிசையை எழுப்புகின்ற
எழில்வீணை தன்னை
எப்படியும் சொந்தமென
ஆக்கிடவே எண்ணி
"என்னவிலை சொல்லுகிறாய்?"
என்றதட்டிக் கேட்டார்!
"இதற்குவிலை யென்னவென்று
கேட்கின்றீரையா?
கஞ்சிக்கு மட்டுமிது
வழிசெய்ய வில்லை
கவலைக்கும் மருந்தாகும்
இதைக்கொடுக்க மாட்டேன்"
என்றந்தப் புலவனவன்
தந்திரத் தினாலே

இச்சையினைப் படிப்படியாய்
மிகஉயர்த்தி விட்டான்
''கவலையின்றி நீயிருக்க
வேண்டும் பொருளெல்லாம்
கண்டிப்பாய்த் தருகின்றேன்
தந்திடுவாய்'' என்று
கெஞ்சுதலாய்ப் பணக்காரர்
கேட்பதனைக் கண்டு
தவக்கமொடு வீணையினைத்
தருவதுபோல் தந்து
தமிழ்ப்புலவன் பொருள்பெற்று
வழிநடந்து சென்றான்
ஃ ஃ ஃ
விருப்பமொடு கனவானும்
வீணையினை யெடுத்து
விரல்களினால் தந்தியினை
அடித்தடித்துப் பார்த்தார்!
இடுக்கியிலே அகப்பட்ட
எலிக்குஞ்சைப் போல
இரக்கமொடு கத்திற்றாம்
இசைப்புலவன் வீணை!
''ஒன்றுக்கும் உதவாத
வீணையினைத் தந்து
உலுத்தனவன் பணம்பறித்தே
ஓடிவிட்டா னன்றோ?
நல்லதொரு வீணையென்ற
ஆசையினா லன்றோ
நம்பிக்கை மோசம்தான்
போய்விட்டே னன்றோ?''
என்றந்தக் கனவானும்
துக்கத்தி னாலே
ஏக்கமொடு எண்ணியெண்ணி
மிகவருந்தி னாராம்!
ஃ ஃ ஃ
இசையடைத்து வைத்திருக்கும்
பெட்டி யென்று
எழில்வீணை தன்னையவர்
நினைத்துக் கொண்டார்!
வீணையிலே இசையில்லை
கருவி தானே!
விரல்களிலே யன்றோ
அத்திறமை வேண்டும்!
அசைகின்ற விரல்களெல்லாம்
கலையைச் செய்யும்
அத்திறமை கலைஞனுக்கே
சொந்த மன்றோ?
காசுக்கு வீணையினை
வாங்க லாகும்!
கலைத்திறமை வாய்குதற்கும்
இயலா தாமே!

துரோகி

-தில்லை வில்லாளன்-



பதினொன்றாம் அத்தியாயம்

காளி கோயிலில்!

அந்த உடைந்த காளி கோயிலில் ஒரு அகல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது! அந்த விளக்கு பரப்பிய ஒளியோ மிக மங்கலாகத்தான் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தது! அந்த ஒளியில் காளி மட்டும் காட்சியளித்தாள்; பக்தர்கள் இருந்து தரிசிக்கவேண்டிய இடங்களோ இருண்டு கிடந்தன.

அந்த இருட்டில் இரண்டு பெண்கள் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முகம் நன்றாகத் தெரியவில்லை. இருந்தாலும் பழகிய குரல்கள் தாம்!

"நளி, அவர் வருவாராடி?"

"போடி உலகம் தெரியாதவளே, தேன் குடிக்க ஈ வருமா என்று கேளேன்!"

"தேனில் நஞ்சிருக்கிறது என்று எண்ணிக் கொண்டால்......?"

"நக்கிப் பார்த்தாவது மடிவோம் என்றுதான் வரும்"

அவர்கள் இருவரும் வேறு எவருமில்லை, ஊர்மிளா, நளினி ஆகிய இருவருமே தான். அங்கே முடீன்கானுக்காகக் காத்து நின்றனர்! அவன் வருவானோ, வரமாட்டானோ என்ற ஐயத்தால் ஊர்மிளா ஏங்கிக் கொண்டிருந்தாள்! நளினியோ அவளைக் கேலி பேசிக் கொண்டே . உண்மையை எடுத்து ஒலிபரப்பினாள். அந்த நான்கு வழிகளும் இருட்டையும் விழித்துக் கொண்டு துளாவிக் கொண்டிருந்தன. கொஞ்சநேரத்தில் அந்த விழிகளில் புத்துணர்ச்சி தோன்றியது! காரணம், குதிரையடி. யோசையைத் துப்பறிந்து கேட்ட செவிகள் தந்தியில் சொல்லிய செய்தியேயாகும்!

ஆம், உண்மையிலேயே முடீன்கான் தன் குதிரை மீதூர்ந்து அங்கு வந்துகொண்டிருந்தான். அந்த இருட்டில்

எதும் தெரியவில்லை. காளி கோயில் மட்டும் கண்ணில் பட்டது. அங்கு எவர் இருக்கின்றனர் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. குதிரையை விட்டுக் கிழிறங்கிக் கோயிலைநெருங்கினன்.

''வாருங்கள்''

இருட்டில் கேட்ட குரல் அது.

உற்றுப்பார்த்தான், ஊர்மிளா நின்றுகொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் இன்னொரு பெண் நின்று கொண்டிருப்பதையும் உணர்ந்தான்.

''ஊர்மிளா, இவள் யார்?''

''என் தோழி நளினி, அரசாங்கத்தில் தான் வேலை. இவளை முழுக்க முழுக்க நம்பலாம்''

''அப்படியானுல் சரி, என்னை ஏன் அழைத்தாய்?''

''மலரை மங்கை ஏன் பறிக்கிருள்?''

''சூடிக் கொள்ள!''

''தங்களை ஊர்மிளா அழைத்ததும் கூடிக்களிக்கத்தான்!''

''இது முறையா, தோழனின் காதலை மொண்ட தோகையாள் நீ''

''மன்னிக்க வேண்டும், அது மிருகக் காதல்''

ஊர்மிளா இப்படி உரையாடலை நீட்டிக் கொண்டிருக்கையில் நளினியைப் பார்த்தாள். அவள், பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டதைப் போல விலகினுள்.

''நான் இடைஞ்சலாக இருக்கமாட்டேன். இந்த மண்டபத்தினுள்ளிருக் கிறேன். போகும்போது மட்டும் கூப்பிட மறந்து விடாதே!''

ஊர்மிளா இதுவரை எட்டி நின்று பேசினவள் அவனைத் தொட்டிழுத்துப் பேசத் தொடங்கினுள். கோயிலின் வெளித்தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தனர். ஊர்மிளா இன்பத்தைக் குழைத்து வழித்து உதட்டுப் பாலடையால் அவனுக்கு ஊட்டிவிட்டாள். அவன் உண்டு மயங்கினுன். இன்ப வேட்டை! காலம போனது தெரியவில்லை.

ஆடைகளைத் திருத்திக் கொண்டிருந்த ஊர்மிளாவைத் திரும்பவும் இழுத்துத் தன் மடியில் போட்டுக்கொண்டு கொஞ்சுதலாக முடின் சொன்னுன்.

''இது ரகசியம், இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு நானும் ஸுராஜுவும் டில்லி செல்கிரோம். ஒரு முக்கியமான செய்தி. அது உனக்குத் தேவையில்லை. திருமபி வந்து விட்ட பிறகு உன்னை அரைக்கணமும் பிரிய மாட்டேன்''

முடின் அவளது மலர் போன்ற முகத்தை உற்றுப் பார்த்தான். பிறகு குங்கும உதடுகளில் தனது ஹுக்காப் புகையால் கருத்த உதடுகளைச் சேர்த்தான். ஒட்டிய உதடுகள் பிரிவதற்கே விரும்பவில்லை போலும்! இந்தக் களியாட்டத்தைப் பற்றிக் கடுகளவும் கவலைப் படாமல் நளினி அவர்கள் பேசிய வார்த்தைகளை மட்டும் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டாள். 'டில்லி செல்கிரோம்' என்ற சேதி கேட்டதும் அவள் மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள். ஊர்மிளாவோ வானத்திலே பறந்துகொண்டிருந்தாள். முடின் காலம் என் கருணையில்லாமல் இப்படி வேகமாக ஓடு

கிறது என்று சபித்துக் கொண்டிருந்தான். ஆனல் இந்த மூவருக்குந் தெரியாமல் காளியின் சிலேக்குப் பின்னுல் ஒருவன் ஒளிந்திருந்தான் என்பது யாருக்குத்தெரியும்!

பன்னிரண்டாம் அத்தியாயம்

கொலேகாரக் கூட்டம்

அமீன்சந்த் தனது இருப்பிடத்தில் அமர்ந்தபடி ஒரு வயோதிகப் பெரியவரிடம் ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சோணிசந்த் வெகு வேகமாக ஓடிவந்தான். அமீன சந்த்தை நெருங்கி 'ஒரு அவசரமானசெய்தி'யென்முன். உடனே அவன் எழுந்து அடுத்த அறையில் புகுந்தான்.

அப்பொழுது அங்கிருந்த நாழிகை வட்டில் இரவு மணி பத்தென்று சொல்லிக் கொண்டிருந்தது!

''இன்னும் இரண்டேமணி...''

''எதற்கு?''

''ஸுராஜுூம்,முடினும் டில்லி புறப்பட!''

''என்ன உளறுகிருய்?''

''நான் உளற வில்லே. காளி கோயிலில் சிலேயின் பின்னுலிருந்து கேட்டேன். ஊர்மிளாவுடன் உறவாடுகையில் மூடின் உதிர்த்த இரகசியம் இது''

''சரி, அப்படியானுல் அவர்களே நீ பின் தொடர்ந்து போ''

''போய்...''

''தக்க சமயத்தில் என் கையொப்பத்துடன் கடிதத்தைப் பாதுஷாவிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்பு''

சோணிசந்த் கிளம்பி விட்டான். அந்த சமயத்தில் நளினியும் அங்கு வந்தாள்.

''ஊர்மிளா எங்கே?''

''இப்பொழுது தான் உள்ளே போகிருள. இது தக்க சமயம் நமது திட்டம் வெற்றி பெற''

''ஏன்?''

''நம் விரோதிகள் இருவரும் டில்லி புறப்படப் போகிருர்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் காரியத்தை முடித்துவிடலாம்''

''அதற்காகத்தான் வைத்தியர் வரப்பிரசாதருடன் பேசிக் கொண்டிருந்தேன். வா, அவசியம் போகலாம்''

வைத்தியர் வரப்பிரசாதர் மிகவும் வயது முதிர்ந்த கிழவர், அவர்நரைத்த தாடியும்தோல் திரங்கியதோற்றமும் பார்ப்பவர்களின் உள்ளத்தைக் கிளறும். அவரது அனுபவம் பெரிதுஎன்று சொல்லத் தோன்றும். அவர் அரசாங்க வைத்தியர்களிலே வயதான



வர், அதே நேரத்தில் பேர் பெற்றவரும் அவரே தான்! அவர் அமீன் சந்த்துக்கு நெருங்கிய நண்பர். மேலும் மத நம்பிக்கை அதிகம் உள்ளவர். முகம்மதிய மதத்தில் சற்று வெறுப்புக் கொண்டவர்.

"வைத்தியரே, நீங்கள் ஒரு தேசத் தொண்டு செய்ய வேண்டும்"

"என்ன அது?"

"இந்துமதம் செழிக்க வேண்டும்"

"ஆமாம்"

"ஆகவே, அலிவர்திகானின் அடக்கு முறை ஒழிய வேண்டும்"

"கிளர்ச்சி செய்யவா, இந்தக் கிழவனைத் தூண்டுகிறீர்?"

"மன்னிக்க வேண்டும், மனமிருந்தால் மார்க்கம் உண்டு. ஒருமருந்து, பலநாள் வேலை செய்து மெல்லமெல்லக் கொல்லும் நஞ்சு தேவை"

"கொலைகாரக்கூட்டத்துடன் என்னைச்சேரவா அழைக்கிறீர்? அது முடியாது!"

"உமது ஒப்பற்ற மதம் பாழாகலாம், ஒரு தனி மனிதன் சாகக்கூடாதோ?"

கிழவர் சிந்தனையிலாழ்ந்து விட்டார். அமீன்சந்த் அவரது முகத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். நளினியின் உணர்ச்சி எப்படிப் பட்டது என்று நம்மால் வருணிக்க முடியவில்லை.

"நான் தருகிறேன் ...."

"உங்கள் பெயர் வெளியில் தெரியாது!" என்று முடித்து விட்டான் அந்த அவசரக் காரன்!

"காரியம் எப்படி முடியும்?"- கிழவர் கேட்டார்.

"அதற்கு நானிருக்கிறேன்" என்ருள் நளினி.

வைத்தியர் வரப்பிரசாதர் மருந்துப் பெட்டியை எடுத்துப் பிரித்தார். அதற்குள் ஒரு பெரிய ஆராய்ச்சியே செய்து ஒரு சிறு பொட்டலத்தை யெடுத்து நளினி கையில் கொடுத்து விட்டு அவள் காதோடு காதாக எதையோ சொன்னார். அவள் தலையை அசைத்தாள்.

பிறகு வைத்தியர் விடை பெற்ருர். அவருக்கு ஒரு பை பரிசாகத் தரப்பட்டது. நளினியும் அரண்மனையை நோக்கி நடந்து விட்டாள். அமீன்சந்த் மனம் குழம்பிக் கொண்டிருந்தது ஏனென்று அவனுக்குப் புரியவில்லை. கொலைகாரக் கூட்டம் என்று வெளிக்குத் தெரிந்து விட்டால் அவன் நிலை என்னவாகும் என்று எண்ணியிருப்பான் போலும்! அதனுல்தான் அவன் முகத்தில் சாவுக்களை கணத்திற்குக் கணம் தோன்றி மறைந்தது!

"திருடன், திருடன்......"

ஊர்மிளா உள்ளுக்குள்ளிருந்து கூவினுள். அமீன்சந்த் ஓடினுன். ஆனுல் அந்தத் திருடனைக் கண்டுகொள்ளமுடியவில்லை! இந்த நிகழ்ச்சி அவனது பீதியை மேலும் வளர்த்தது! வந்தவன் யாராக இருக்க முடியும் என்று அவனுல்கண்டு கொள்ள முடியவில்லை.



பதின்மூன்றும் அத்தியாயம்

பாலேந்திய பாவை

அலிவர்திகான் பஞ்சணையில் உட்கார்ந்தபடியே இருந்தான். நளினி அப்பொழுது தான் உள்ளே நுழைந்தாள்.

"இந்நேரம் வரை என்ன செய்தாய் நளினி?"

"அப்பாவைப் பார்த்து விட்டு வரலாம் என்று சென்றிருந்தேன். அந்தச் சின்னக் குட்டி ஊர்மிளா என்னைக் கட்டிக் கொண்டு விட மாட்டேன் என்று தொந்தரவு செய்தாள். அதனால்தான் இவ்வளவு நேரம்!"

"சரி, அந்தப் பாலை எடு"

"இன்னும் பாலும் அருந்தவில்லையா?"

நளினி பாலைப்போய் எடுத்தாள். திடுக்கிட்டவள் போல நின்றாள்.

"பால் ஆறிவிட்டதே. சூடாக்கி வருகிறேன்" என்றாள் அவள்.

"வேண்டாம், இப்படிக் கொண்டுவா"

"இல்லை, இல்லை, இதோ அரை நொடியில்" என்று ஓடினாள் நளினி.

உள்ளே, சென்ற நளினி பாலைக் கொதிக்கவைத்தாள். அதனை இரண்டு - வெள்ளிக் கோப்பைகளில் பகிர்ந்து கொண்டாள். ஒரு கோப்பையில் கொடுத்த பொடியைத் தூவி விட்டாள். அதனைத் தூவும் போது அவள் முகத்தைப் பார்த்திருக்க வேண்டுமே! பயம் என்ற உணர்ச்சிக்கு எவ்வளவு வலிவு? முகத்தையே ஆயிரங்

கோணலாகத் திருப்பி விடுகிறதே!

இரண்டு கோப்பைகளையும் வெளியில் கொண்டு வந்தாள்.

"இந்தாருங்கள்............"

"நீமட்டும் ஏன் நிற்கிறாய்?"

கிழவனுக்குக் காமவுணர்ச்சி வராது. வரக் கூடாது. வந்து விட்டால் அதன் விளைவு விபரீதமாகத் தானிருக்கும். அவை அத்தனையையும் எடுத்துச் சொல்வதென்பது இயலாது, முயற்சி செய்வதும் முட்டாள் தனம்! ஆகவே அளவோடு நிறுத்தி விடுவதுதான நம் கடமை.

நளினி அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். பிறகு அவள் மடி அவனுக்கு மஞ்சமாகிவிட்டது. கோப்பையைத் தான் வாங்கி அவன் உதட்டில் பதித்தாள். அவன் குழந்தை போல அடம் பிடிததான்! பிறகு இருவரும் போட்டிப் பந்தயம் வைத்தனர். யார் கோப்பை முதலில் காலியாகிறது என்று பந்தயம் வைத்தனர். கோப்பைகள் காலியாயின. ஆனால் பந்தயத்தையே அவன் மறந்துவிட்டான். அவன் நாக்கில் ஏதோ புண் ஏற்பட்டதுபோன்ற உணர்ச்சி தெனபட்டது. தொண்டையிலும் ஒருவிதமான வலி ஏற்பட்டது. இவை அத்தனையையும் மறைத்து விட்டது• அவளது அணைப்பு! மறைப்பதென்ன மறந்து விடவே சொல்லிக்கொண்டிருந்தன அவளது ஆர்வமிக்க முத்தங்கள்! கிழவனுக்குக் குமரியிடமிருந்து இவ்வளவு ஆர்வமாக இன்ப விருந்து கிடைக்குமா? பணத்திற்காகப் பசப்பலாம், பதவிக்காக மயக்கலாம். ஆனால் நளினிபோல உண்மையாகவே ஆசை நரம்புகளை மீட்டிவிட யாரால் முடியும்?

அவன் மயக்கம் வருவது போல உணர்ந்தான். உடனே அவன் அவள் மடியில் தலையை வைத்துப் படுத்துவிட்டான். பணிப்பெண்ணாக இருந்தால் எட்டியிருந்து விசிறிவிடுவாள். இவள்தான் பட்டத்தரசியை விடப் பன்மடங்கு உரிமையுள்ள பாராளும் பிராட்டியாகி விட்டாளே! அவனது உடைகளைக் களைந்து விட்டு விசிறி கொண்டு தென்றலைக் கூப்பிட்டாள். வியர்வையால் நனைந்த முகத்தைத் தனது பட்டுக் கைக்குட்டையால் துடைத்தாள். கிழவன் இன்ப வெள்ளத்தில்மிதப்பதாக எண்ணிக்கொண்டான். அவன் உடலில் நஞ்சேறி விட்டதை அறியவில்லை. பாவம்!

அவனை எப்படி உறங்கச் செய்வது என்று எண்ணினாள். அவனைத் தழுவிக் கொண்டு தானும் உறங்குவது போலப் பாசாங்கு செய்தாள். அவனும் அவளை மார்புறத் தழுவிக்கொண்டான். அதற்கு மேல் அவனால் எதையும் செய்யமுடியவில்லை! நஞ்சின் வேலை நாடி நரம்புகளில் அப்பொழுதுதான் தொடக்கவிழா செய்துகொண்டிருந்தது!

கொஞ்ச நேரத்தில் இருவரும் தூங்கியேவிட்டனர். பிறகு பால் கிண்ணம் உருண்ட சத்தத்தில் நளினி விழித்துக் கொண்டாள். எதிரில் ஒரு வீரன் நின்றுகொண்டிருந்தான. அவளால் பேசமுடியவில்லை; நாவெழ மறுத்து விட்டது.

[தொடரும்]

ஜெர்மனியில்

பெரிய புராணம்

★ வேந்தரசன் ★

ஜெர்மானியர் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆரிய இனம் உலகை ஆளும் இனமாக வேண்டும் என்ற பேராசைக்காளாகி உலகப் போரை உண்டாக்கி இன்று இருக்குமிடம் தெரியாமல் ஒழிந்துபோனான் ஹிட்லர். அந்தப் பரம்பரையிலே தோன்றிய பெருமையுடையவன் தான் போடுபிரைஸ்! இவன் ஜெர்மனியிலுள்ள பிரிமன் நகரில் வாழ்ந்து வந்தான்.

37 வயது நிரம்பிய போடுபிரைஸ் நல்ல பலாட்டியன். ஆளைப் பார்த்தால் அரண்டு போகும்படியான பெரிய உடல். இரத்தம் இரத்தம் என்று தினவெடுத்துத் திரியும் அவனது தோள்கள் மலைபோல் பெருத்துக் கல்லைப்போல் கனத்துவிட்டன. இரத்தவெறி கொண்டலைந்த அவன் ஹிட்லரை மிஞ்சிய நாகரிக வாதியாகிவிட்டான்.

போடுபிரைஸுக்கு மாமிசமென்றால் உயிர். தசைக்கறியென்றால் ஒரு துள்ளுத்துள்ளி விழுவான். அவன் தின்னாத மிருகம் பாக்கியில்லை. ஆடு மாடு, கோழி, குதிரை, பாம்பு, பாச்சை, வௌவால், நாய், பன்றி; புழு இன்னும் எத்தனையோ ஊர்வன, நடப்பன, பறப்பன அத்தனை பிணங்களுக்கும் புதைகுழி அவன் வயிறுதான். உணவு உண்ணாமல் இருந்தாலும் இருப்பான், இறைச்சி இல்லாமல் உணவுண்ண மாட்டான். இறைச்சி இறைச்சி இறைச்சி. எப்பொழுதும் இதே நினைவு, இதே உணவு, இதே குறி!

இப்படிப்பட்ட அருமையான குறிக்கோளுடைய போடுபிரைஸுக்கு இந்த உலகில் ஒரே ஒரு கடைசி ஆசை. அந்த ஆசை மட்டும் நிறைவேறிவிட்டால் அவன் இந்த உலகில் பிறவி எடுத்ததன் பயன் நிறைவேறிவிட்டதென்னலாம். அந்த ஆசை நிறைவேற நெடுநாட்கள் ஆகி நான்கு ஆண்டுகளுக்கு முன்தான் கைகூடியது.

இறைச்சி இறைச்சி என்று இதே நினைவாகத் திரிந்து கொண்டிருந்த அவனுக்குச் சிந்தனை விசித்திரமாக ஓடியது. மற்ற நாட்டிலுள்ள விஞ்ஞானிகளுக்கெல்லாம், மனிதனுக்கு எந்த வசதியை எப்படியுண்டாக்கலாம், மின்சாரத்தால் எந்த நோயைத் தீர்க்கலாம், மனித உழைப்பைக் குறைத்து உல்லாச வாழ்வையுண்டாக்க எந்தெந்த சக்திகளைப் பயன்படுத்தலாம் என்று சிந்தனை வேகமாகச் சுழலும்போது, எங்

தக் குண்டைப் போட்டு எந்த நாட்டை அழிக்கலாம், எப்படி உலகை வளைக்கலாம் என்று ஜெர்மன் விஞ்ஞானிகளின் சிந்தனை ஓடியது. போடுபிரைஸுக்கோ இன்றைக்கு எந்த மிருகத்தின் இறைச்சியைத் தின்றால் மதமதப்பு வரும் என்ற திசையில்தான் சிந்தனை ஓடியது. அவனுடைய விசித்திரமான ஆசைக்கிடையே, ஒரு ஆசை நிலை பெறலாயிற்று. அதில்தான் அவன் ஹிட்லருக்கு மேல் போய்விட்டான். நாதுராம் விநாயக் கோட்சேகூடப் போடுபிரைஸுக்குமுன்சிறுதுரும்பாகிவிட்டான். நாதுராம் ஆசை போடு பிரைசின் ஆசையைவிட எவ்வளவோ எளிதாக நிறைவேறக் கூடியது.

அப்படி என்ன பேராசை தான் அவனுக்கு ஏற்பட்டது?

ஆடுமாடு முதலிய மிருகங்கள், இறைச்சியை ஒரு உணவுப் பொருளாகவே நினைப்பதில்லை. ஆட்டிறைச்சி மாட்டிறைச்சி தின்னும் நாய், மற்றொரு நாயின் இறைச்சியை மறந்தும் தின்பதில்லை. யானையை அறைந்து கொன்று தின்னும் சிங்கம்கூடத் தன்னினத்தைக் கொன்று தின்பதில்லை. இன்னொரு நாட்டானைத் தன் நாட்டு நலத்துக்காகக் கொன்ற சிங்க ஜர்மானியன்கூடச் செத்துவிழுந்த மனிதர்களின் இறைச்சியைத் தின்பதில்லை. இது ஏன் உலக இயற்கையாக இருக்க வேண்டும்? இதை ஏன் மாற்றியமைக்கக் கூடாது? உலகமுள்ளளவும் அழியாத பேரை ஏற்படுத்திக்கொண்ட ஹிட்லர், கோட்சே இவர்களையெல்லாம்விட அதிகம் புகழை நாம் அடைய இந்த இயற்கை விதியை மாற்றியமைத்துத் தான் ஆகவேண்டும்.

இப்படியெல்லாம் போடு பிரைஸ் நினைத்தானோ இல்லையோ, மனித இறைச்சி தின்று சுவை பார்க்க வேண்டும் என்பதில் மட்டும் அவனுக்கு ஆசை நிலைகுத்திப் போய்விட்டது.

மனித இறைச்சி என்றால் கேவலம் சாகப் போகும் கிழவனுடைய இறைச்சி சுவையாகவா இருக்கும்? சப்பென்றல்லவா இருக்கும்? சின்னக் குழந்தையின் கறி நன்றாகத் தான் இருக்கும். அது போடு பிரைஸின் வயிற்றுக்குப் போதுமா என்ன? நாடி நரம்பெல்லாம் முறுக்கேறிய நல்ல இளைஞனாக இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட இளைஞனின் இறைச்சிதான் போடுபிரைசுக்கு ஏற்றது. சுவையாகவும் இருக்கும்.

நான்கு வருடங்களுக்கு முன் ஒருநாள் போடுபிரைஸுக்கு இளைஞன் இறைச்சி தின்னும வாய்ப்புக் கிட்டியது, நல்ல அழகான இளைஞன். ஹிட்லர் வளர்த்த நாட்டுப்பற்று இரத்தத்தில் விண் விண்ணென்று தெறித்துக்கொண்டிருந்தது. அவன் இறைச்சியைத் தின்றுதான் மனித இறைச்சியின் சுவையைக் கண்டறிய வேண்டுமென்று போடு பிரைஸ் உள்ளம் கிளர்ந்தெழுந்தது.

என்னவோ சொல்லி அந்த இளைஞனை யாரும் வராத இடத்திற்கு அழைத்து வந்துவிட்டான் போடுபிரைஸ். அந்த இளைஞன் எதிர்பாராத விதமா

கத் திடீரென்று அவனை வெட்டிக் கொன்றுவிட்டான், போடு பிரைஸ்.

அப்படியே அந்த உடலை வீட்டிற்கு எடுத்துப் போக முடியுமா? வெளியில் தெரிந்து விட்டால், இறைச்சி அருமை தெரியாத உலகம் இவனைச் சும்மா விடாதே! அவன் அருமை மனைவியே அவனைக் காட்டிக்கொடுத்து விடுவாளே! அதுவுமன்றி ஒவ்வொரு உறுப்பின் இறைச்சியுமா சுவையாக இருக்கும்!

கொழுப்புத் தசை நிறைந்த ஈரல் குலையையும், தொடைக் கறியையும் அறுத்தெடுத்துக் கொண்டான். கசாப்புக் கடைக்காரன் மடிப்பதுபோல இறைச்சியை மடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அவனையும் மனிதனென்று நினைத்து வாழ்க்கைப்பட்ட மனைவியை அழைத்து "இதைச் சமையல் செய்யடி" என்று ஆணையிட்டான். அவளுக்கு இறைச்சியின் வகைகள் அத்தனையும தெரியாது போலிருக்கிறது. "இதுஎன்ன இறைச்சி?" என்று கேட்டாள். "அருமையான பன்றிக்கறி. நல்ல மசாலாபோட்டுப் பதப்படுத்து" என்று ஆணையிட்டுவிட்டான்.

"தேவைக்கதிகமாக வாங்கி வந்துவிட்டீர்களே, இவ்வளவையும் என்ன செய்வது" என்று அந்தப் பேதை கேட்டாள்.

"உப்புக்கண்டம் போட்டால் போகிறது" என்று மிக எளிதாகச் சொல்லிவிட்டான் பாதகன் போடுபிரைஸ்.

அந்த நங்கையும் கடைசி வரை என்ன கறியென்று தெரியாமலே சமைத்து, அந்தப் பயங்கர மனிதனின் பக்கத்திலிருந்துகொண்டே அதைச் சுவைத்துச் சாப்பிட்டாள்.

பிறகு நெடுநாட்களாக இன்னொரு முறை மனித இறைச்சி தின்பதற்காக யாரையும் கொல்லாமலே இருந்துவிட்டான் போடுபிரைஸ். ஆசை வந்த போதெல்லாம் உப்புக்கண்டத்தைச் சுடச் சொல்லி மற்ற கறிகளோடு சேர்த்துச் சாப்பிட்டு வந்தான். நாட்கள் ஆனதும் உப்புக்கண்டமும் தீர்ந்துவிட்டது. இரண்டு ஆண்டுகள் ஆனபிறகு மறுபடியும் மனித இறைச்சி ஆசை எழுந்தது. அதை நினைத்ததும் நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்தது. மீண்டும் ஒருவனைக் கொன்று தின்றால் ஒழிய அவன் ஆசை அடங்குமென்று தோன்றவில்லை. அவன் ஆசை வளர வளர மற்ற கறிகள் அவனுக்கு வெறும் பாகற்காய்களாகி விட்டன. இப்பொழுது இவன் குறிக்கு நல்ல இரத்தத் துடிப்புள்ள இருபது வயது இளைஞன் ஒருவன் அகப்பட்டான். அவனையும் முன் மாதிரியே கொன்று ஈரலைத் தின்றுவிட்டுத் தொடைக்கறியை உபபுக்கண்டம் போட்டுவிட்டான்.

இந்த இரண்டாவது கொலை அரசாங்கத்திற்குப் போடுபிரைசைக் காட்டிக் கொடுத்துவிட்டது. புலன் விசாரித்ததில் 1945லும் 1947லும் இக்கொலைகளைச் செய்திருக்கிறனென்று தெரிந்தது. இம் மாதம் 12-ம் தேதி (12—4—49) இவனுக்கு பிரிமன் நகர நீதிமன்றத்தார் மரண தண்டனையளித்துள்ளார்கள் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இப்படி எல்லாம் உண்மையாகவே நடந்திருக்கும்பொழுது சிறுத்தொண்டர் புராணம் பொய்யென்று சொல்கிறார்களே இது பொருந்துமா? மனித இறைச்சி தின்பதைப் போடுபிரைஸ்தானா துவக்கி வைத்தான்? சிறுத்தொண்டர் வீட்டில் சிவபெருமானே சைவசாமியாராய் வந்து நாகரிகத்தை வளர்க்க வழிவகுத்து விட்டாரே யென்றெல்லாம் சைவர்கள் கேட்டாலும் வியப்பதற்கில்லை. இலக்கியத்தில் சைவசாமியார் செய்ததைப் போடுபிரைஸ்தான் உண்மையாகச் செய்து காட்டிவிட்டானே!

இக்காலத்தில் பல சைவர்கள தங்களைச் சைவ சமயத்தார் என்று கூறிக் கொண்டே எத்தனை ஆடு கோழிகளை அறுத்துத்தின்கிறார்கள். பாதகர்கள் கடவுளுக்கு மல்லவா, பகுத்தறிவற்ற கண்ணப்பரைப் பின்பற்றி ஊன் படைக்கிறார்கள். அத்தகைய சைவ சமயத்தில் பிறந்த சாமியார், தான் பிள்ளைக்கறி சாப்பிட வேண்டுமென்ற தன் தகாத ஆசையைத் தீர்த்துக் கொள்ளச் சிறுத்தொண்டர்போன்ற, மக்கட் பற்றற்ற பக்தரை நாடித் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

சைவசாமியாரும போடுபிரைசும் ஒருவரேதான். காலமும் நிகழ்ச்சியும் வேறுபடுகின்றனவே தவிர மற்ற வகையில் இருவரும் ஒருவரேதான்.

அவர் அன்று வந்தார். தாய் பிடிக்கத் தந்தை யறுத்துத் தாத் தலைக்கறியையும்சேர்த்து உண்டார்.

இவர் இன்றுதானே அறுத்துத் தொடைக் கறியும் குலை ஈரலும் மட்டும் கொண்டு சென்று மனைவியைச் சமைக்கச் சொல்லித் தின்றார்.

அவர் அன்று வெளிப்படையாகப் பிள்ளைக்கறி வேண்டுமென்று கேட்டார்; அவரை மறித்து நிற்க ஆளில்லாதபடி மூட நம்பிக்கை நிறைந்திருந்தது அனறு.

சமய வாதிகளின் மூடத்தனத்திற்குக் கட்டுப் பட்டிருந்தது அன்றைய ஆட்சி. எவனே சமயக் குறியணிந்து வருகிறான் என்பதற்காகத் தாம பெற்ற பிள்ளையைக்கூட வெட்டிக்கறி சமைத்துக் கொடுக்கும் அளவு பாசமற்ற சேக்கிழார் உள்ளம் சிறுத்தொண்டர்க்கும் அவர் மனைவிக்கும் இருந்தது. கடவுளடியவர்க்குப்பெண்டாட்டியைக்கொடுத்தேனும் பிள்ளைக்கறி படைத்தேனும் பக்தியைநிலை நாட்ட வேண்டுமென்னும் அற நெறிபரப்பி வந்த பெரிய புராண காலம் அது. ஆனால் இந்தக் காலமோ பகுத்தறிவுக் காலம், அதுவும் உலகமே வியக்கத் தக்க விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெறும் நாடு ஜெர்மனி. அங்கே அரசாங்கக் கட்டுத் திட்டங்கள் மிகுதி.

ஆகவே அரசாங்கக் கட்டுப் பாட்டுக்குப் பயந்த 'போடுபிரைஸ் பரமசிவன்' மறைவாகக் கொன்று தின்றார்.

வேறுபாடு இவ்வளவுதான்! மற்றபடி விஷயம் ஒன்றுதான்.

வீணை பேசிற்று

ஆர். துரைசாமி

பாரதிதாசனது கவிதைகள் பலவற்றிலும் ஒரு முக்கிய மான பண்பு, வெளிப்படை யான ஒரு பொருளிருக்க வேறு புதுப் பொருளை, புதுக் கருத் துக்களை, அக் கவிதைகளைப் பலமுறை படிக்கும்போது தோற்றுவதாகும். இப்புலமை சாதாரணக் கவிஞர்களுக்கு எளிதில் அமையாது.

தோளிலே பெரிய கோடாலி. தொழிலோ மரம் வெட்டுதல். மாலை வந்தால் மாலைபோடு வேன் என்று அவனுக்குத் தூது சொல்லி அனுப்புகிறாள், அவன் காதலி.

"வெய்யில்தாழ வரச் சொல்லடி
—இத்தையல்
சொன்னதாகச் சொல்லடி
வெய்யில்தாழ வரச்சொல்லடி

கையில் கோடாலி கொண்டு
கட்டைபிளப்பாரைக் கண்டு

கொய்யாக் கனியை இன்று
கொய்துபோக லாகுமென்று"

அவனது தொழிலோ மரத்தை வெட்டிச் சாய்த்தல். அவளது தொழிலோ பாட்டிலே தெரிகின்றதே, பேச்சை அமுதாய்ச் சாய்த்தல்! மேற் குறித்த பாட்டைப் பலமுறை படியுங்கள். "அடேயப்பா! கோடாலிகொண்டு மரத்தை வெட்டும் அய்யாவுக்குக் கொய் யாப் பழத்தைப் பறிப்பதா பிரமாதம்!" என்று கேட்பது போல் தொனிக்கவில்லையா?

"இதுவரை கொய்யாப்பழ மாக இருந்த என்னை மாலை வந்தால் கொய்யும் பழமாகக் காண்பாய். ஏமாந்தால் திரும் பவும் கொய்யாப்பழமாகி விடு வேன். பின்னர்க் கொய்யாப் பழத்திற்குக் கொட்டாவிவிட் டுப் பயனில்லை" என்ற கருத் தும் தெறிக்கின்றது அவள் பேச்சில்.

பாரதிதாசன் புலமையின் உண்மை எடுத்துக்காட்டு அவரது 'எதிர்பாராத முத் தம்'. சின்னஞ் சிறு புத்தகம்; ஆனால் பலவித உணர்ச்சிக ளின் அடங்கல் அது.

பொன்முடி வரவு செலவுக் கணக்குப் புத்தகங்களில் மூழ்கி யிருக்கின்றான். தனி அறை. சுற்றிலும் யாதொரு ஒலியும் இல்லை. அவன் காதலியோ அவனைத் தேடி வருகின்றாள். எங்கிருப்பாரோ என்ற ஏக்கம் ஒரு புறம். யாராவது வந்து விடப் போகிறார்களோ என்ற பயம் மற்றொரு புறம். தனியா யிருப்பாரோ என்ற தயக்கம் வேறு. சீக்கிரம் வீடு திரும்ப வேண்டும், தாய் தேடுவாளே என்ற அச்சம் கூட. ஆனால் நல்வாய்ப்பாகத் தனியறையில் காதலனைக் கண்டாள். கண் டதும் விண்டது, நெடுநாள் காதலனைக் காணாது அடக்கி வைத்திருந்த அவள் உணர்ச்சி.

ஆத்திரம், ஆவல், ஆர்வம், ஆனந்தம், அச்சம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒன்றேடொன்று மோத, 'தன் சத்தான பொருளை' 'தன்னைப் பித்தாக்கிய அத்தானை, 'அத்தான்' என்றழைத்தாள். உரக்கக் கூப்பிட்டால் யாராவது கேட்டுவிட்டு வந்துவிடப்போகிறார்கள் என்ற பயம். ஆதலின் சற்றுத் தாழ்த்திய குரலில், ஆனால் சிக்கிரமாக அத்தான் என்றழைக்கிருள் நங்கை. அவனே அவளை அச்சமயத்தில் எதிர்பார்க்கவேயில்லை. ஆதலின் அவனுக்கு ஆச்சரியம், பயம் கூட. திடுக்கிட்டான்.

ஆர்வத்தில், ஆத்திரத்தில், அவசரத்தில் தாழ்த்திய குரலில் கூறிய 'அத்தான்'என்ற சொல்லில் "அத்" என்றபாகம் விழுங்கப்பட்டுவிட்டது. அவனுக்கும் எதிர்பாராத சமயத்தில் காதில்விழுந்ததால் 'அத்' என்ற பாகம் சரியாகக்காதில் விழுந்திருக்காது. தமிழில் அவசரத்தில் 'அரங்கநாதன்'என்று அழைத்தால் 'ரங்கநாதன்' என்றுதான் வரும். 'த்'என்ற மெய்யெழுத்தோ உச்சரிப்பில் முதலில் வரவே வராது. ஆதலின் 'அத்' என்ற பாகம் அவசரத்தில் விழுங்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. 'தான்'என்ற பாகம்தான், அவன் காதில் விழுந்திருக்கும். அழுத்தமான உச்சரிப்பு 'தா' என்ற எழுத்தில். ஆதலின் 'தான்' என்று சொல்வது வீணையிலோர் தந்தி 'டங்' என்று எதிர்பாராத நிசப்த நிலையில் ஒலிப்பதுபோல் இருக்கின்றது.

"வீணையிலோர் தந்தி
மெதுவாய் அதிர்ந்ததுபோல்
ஆணழகன் என்றெண்ணி
அத்தான்என் றுள்நங்கை"

என்ன அழகான ஒலி—பொருட் பொருத்தம். அதிர்ந்த என்ற சொல் சரியான இடத்தில் மிகப் பொருத்தமாகக் கையாளப்பட்டிருக்கின்றது. அடியார்க்கு நல்லாரும் "செம்பகையார்ப்பே அதிர்வே கூடம்" எனுமிடத்தில் "அதிர்வெனப்படுவது இழுமெனலின்றிச் சிதற உரைக்குநர் உச்சரிப்பிசையே" என்று 'சிதறவுந்தல்' எனும் பொருளை 'அதிர்தல்' எனனும் சொல்லிற்குக் கூறுகின்றார்.

"எதிரதாக் காக்கு மறிவினர்க்
இல்லை
அதிர வருவதோர் நோய்"

என்ற குறளில் எதிர்பாரா்த தன்மை, திடீரென்று தோன்றும் தன்மை ஆகிய பொருட்கள் 'அதிரவரும்' என்ற சொல்லில் பொதிந்திருப்பது இது சார்பாக எண்ணி மகிழத்தக்கது. 'அதிர்ந்ததுபோல்' என்ற சொல் எதிர்பாராத தன்மை, திடீரென்று தோன்றிய நிகழ்ச்சி ஆகிய கருத்துக்களை எவ்வளவு அழகாகச் சிதறச் செய்கிறது. பாரதிதாசன் வீணையை எவ்வளவு அழகாகப் பேசவைக்கிறார் பாருங்கள். (அத்)தான் என்ற எதிர்பாராத சத்தத்தை 'எதிர்பாராத முத்தம்' என்ற கவிதையில் பாரதிதாசன் வீணையின சத்தத்தோடு ஒப்பிட்டுக் காட்டுதல் அவர் தம் கவிதைப் புலமைக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போன்றதாகும். ○

வளரும் இலக்கியம்

அணியுங்கள் கருஞ்சட்டை

இன்றைய திராவிடத்தின் நிலையையும், திராவிடர் கழகத்தின் போராட்டத்தையும் ஒவ்வொரு துறையிலும் கழகம் பெற்றுள்ள வெற்றியையும் அலசிக்காட்டிய பிறகு திராவிடநாடு திருநாடு ஆகும்வரை கருஞ்சட்டை யணிந்து தொண்டாற்ற வேண்டுமென்ற கருத்தைக் கூறுகிறார் தோழர் கூத்தரசன். 32 பக்கத்தையும் ஒரே மூச்சில் படித்துவிடும்படி செய்யும் கருத்தோட்டமுள்ள தமிழில் கட்டுரையை எழுதியிருக்கிறார். விலை ஆறணா. தோழமைப் பதிப்பகம் 94/95 புதுத்தெரு, மண்ணடி சென்னை 1.

இன்பபுரி

திருச்சி நகரசபை வரவேற்புக்கு நன்றிபகர்ந்த பெரியார் இராமசாமியின் சொற்பொழிவு இது. அழகிரிசாமி நினைவு வெளியீடு. விலை அணா 2. தி. மா. இராமலிங்கம் 12 B. காவல்காரத் தெரு, தென்னூர், திருச்சி.

காமராஜர்

காமராஜர் பெரிய அரசியற் சூழ்ச்சி வல்லார் என்கிறார்களே! அரசியலை ஆட்டிப் படைக்கிறதாகத்தானே நமக்குத் தோன்றுகிறது. ஆனால் அவர் ஆட்டுகிறாரா, ஆட்டப்படுகிறாரா? அவரால் ஆட்டமுடியுமா? என்பது போன்ற பிரச்னைகளை முன்கொண்டு வருகிறார் தோழர் ஆசைத்தம்பி. விலை 5 அணா. தீச்சுடர் நிலயம், சிறுகனூர், திருவானைக்காவல் வழி.

பத்து ஆண்டுகளில் திராவிடம்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க வின ஈரோட்டு மாநாட்டுச் சொற்பொழிவு. திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்துக் காங்கிரஸ் ஒழிய வேண்டுமென்ற திரு. வி. க. வின் முழக்கம். ஆரியத்தையும் திராவிடத்தையும் பிரித்துக் காட்டத் திருக்குறள் ஒன்றே போதுமே எனபதுபோன்ற அருங் கருத்துக்கள். பத்தாண்டுகளில் திராவிடங்கிட்டுமென்ற உறுதிமொழி. இவை அத்தனையும் நிறைந்த புத்தகம். விலை நாலணா. சிந்தனைப் பதிப்பகம், தாராபுரம் P. O. கோவை மாவட்டம்.

அமுகை

வாழ்க்கையில் நிகழும் பல நிகழ்ச்சிகள் பற்றிச் சிந்திக்கும் பல கட்டுரைகள். இடையின வல்லினப் பிழைகள் புத்தகமெங்கும் மலிந்துகிடக்கின்றன. அச்சுப் பிழை மிகுதி. ஆசிரியர் ல.சேதுராமன். விலை 10 அணா. சேது பதிப்பகம் 19 B. புதுச்சேரித் தெரு, கரூர்.

ராம் ரஹீம்

தமிழ்வாணன் எழுதிய அழகான கதை. ராம்-ரஹிம் என்ற இரண்டு நண்பர்களின் கதை. இரண்டுபேரும் உயிருக்குயிரான நண்பர்கள், ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள். மிகநல்ல கதை. கல்கண்டு, 6 ஹண்டர்ஸ் ரோடு வேப்பேரி, சென்னை.

நல்ல நண்பர்கள்

ராமுவும் சீதையும் ஒரு நாயை வளர்த்து வந்தார்கள். அந்தநாய் அழைத்துவந்தவாத்து ஒருநாள் செத்து விட்டது. அதைப்புதைத்த இடத்திலேயே கிடந்து மழையில் மரம் விழுந்து நாய் செத்துப் போய்விடுகிறது. மிக உருக்கமான கதை. ஆசிரியர் அழ. வள்ளியப்பா, குழந்தைப் பதிப்பகம், 4. ரட்லண்ட் கேட் காலனி. சென்னை 6.

சங்கு (சித்திரை மலர்)

அருமையான கதைகளும் பாட்டுகளும் இதில் நிறைய வெளிவந்திருக்கின்றன. விநோத சைக்கிள்களின் படங்கள், எழுந்திரு தம்பிபோன்ற படங்கள் வேடிக்கையாக இருக்கின்றன. சங்கு பதிப்பகம், ராயவரம், விலை 2 அணா.

சுதந்திர ஜோதி

பெரியோர் வாழ்க்கைக் குறிப்பு, பாலர் மேடை, பழமொழி, விடுகதை, தெரியுமா? இதென்ன அதிசயம் போன்ற பல சுவையான பகுதிகளுடன் மலர்ந்திருக்கும் சுதந்திரஜோதி குழந்தைகளுக்கு நல்ல பத்திரிகை. மாதஇதழ். விலை 1 அணா புதுக்கோட்டை.

மானசீகம்

மற்றபத்திரிகைகளைப் போல் கதை கட்டுரைகளுடன் வருகிறது. கண்ணைக்கவரும் முறையில் அமைப்பு இல்லை. கண்ணன் எழுதிய அட்டைப் படம் அழகாக இருக்கிறது. சுவைத்துச் சிரியுங்கள் என்ற பகுதி சுவையாகவும் இல்லை—, சிரிக்கத் தோன்றவும் இல்லை. ஒவ்வொரு பக்கமும் கவர்ச்சி தரும்படி அச்சுக்கோர்வை செய்யப்பட்டால்தான் கட்டுரைகளைப் படிக்கததோன்றும் என்று கூறவிரும்புகிறோம். ஆசிரியர் B. சோமசுந்தரம் B,A. 14-97 ஒப்பனக்காரத்தெரு கோயம்புத்தூர். மாதஇதழ் விலை அணா 4.

ஓர் பகல்

இந்தக் கதை படிப்பவர்க்குக் கசப்பாக இருக்குமாம். ஏனென்றால் உண்மையின் உருவம் கசக்கத்தான் செய்யுமாம். தோழர் வ.ரா. முன்னுரையில் இப்படிக் கூறுகிறார். இந்த இளம் . எழுத்தாளர்களுக்கு வேறு உண்மைகள் ஒன்றும் கிடைக்கவில்லையா? கிளறுவதற்கு விபசாரச் சாக்கடைதானா கிடைத்தது என்று எண்ணும் போது நமக்கு வருத்தமாயிருக்கிறது. நடையில் இன்னும் தெளிவு வேண்டும். எழுதியவர் "மதியழகன்". விலை அணா 6. முருகன் பதிப்பகம், குளித்தலை, திருச்சிராப்பள்ளி-

வரப்பெற்றோம்

நாத்திகம் பரவட்டும்- பெரியார் ஈ. வே. ராவின் சொற்பொழிவு. விலை ஆறணா. இலக்கியப் பாசறை, 140 ஆழ்வார்ப் பேட்டை, சென்னை.

பும்முறை:- ஆசிரியர் "தண்டமிழ்ப்பித்தன்" கடலூர் N. T. விலை இரண்டணா.

கிராமஒளி:- ஆசிரியர் ந. இராமசாமி திட்டக்குடி P. O. மாத இதழ். 2 அணா

தபால்:- ஆசிரியர் ஏ. சாலமன் அப்பாத்துரை 6 பிஷப்வாலர் அவென்யூ. சென்னை 4. வார இதழ் 4 அணா

திருநபிதினமலர்:- இஞ்சும் வெளியீடு. முஸ்லிம் வாலிபர் சங்கம் பொறையார் S. I. Ry.

புரட்சி வீரர் ஜெயப்பிரகாஷ்:- ராஜா புக்டிப்போ, மதுரை. விலை 12 அணா

பட உலகம்:- வெளியிடுபவர் M. சிவராமன், குடியாத்தம் மாத இதழ். 1 அணா.

சோலை:- ஆசிரியர் வி. நரசிம்மன், சோலை காரியாலயம், தாயில்பட்டி, சிவகாசி வழி. குழந்தைகள் மாத இதழ். விலை. 1 அணா

தேன் திலகம்:- ஆசிரியர் வி. எம். ஜேசு தாஸ். தென் திலகம் அலுவலகம். நாகர் கோயில். வார இதழ் 1 அணா

போர்முரசு:- ஆசிரியர் ஆர். சோணைமுத்து. போர்முரசு காரியாலயம். 55, நன்மைதருவார் தெரு, மதுரை. வார இதழ் 2 அணா.

லோகசக்தி:- ஆசிரியர் ம. கி. திருவேங்கடம். லோகபானு பிரஸ் கோமளீஸ்வரன்பேட்டை சென்னை 2. வார இதழ் 1 அணா

மான்:-ஆசிரியர் கலைவாணன். அஞ்சுகம் காரியாலயம் 8, அவதானம் பாப்பையர் ரோடு, சென்னை 7, வார இதழ் காலணா.

அங்கு சாதாரணம் இங்கு அதிசயம்!

லண்டன் மணிக்கூண்டுக் கருகாமையில் உள்ள பிரசித்தமான ஒரு ஹோட்டலில் நமக்குத் தேவையான உணவு வகைகளை நாமே எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடலாம். அதைக் கவனிக்கவே அங்கு யாரும் ஆட்கள் இல்லை. நம்முடைய நாணயத்தில் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள். விலை விபரங்கள் அங்கேஒட்டியிருக்கின்றன. நாமாகக் கணக்கிட்டுச் சில்லறையைப் பொருளாளரிடம் கொடுத்துச் செல்ல வேண்டியதுதான்.

முதல் நாள் நாங்கள் மூவர் அங்கே சென்று வேண்டிய மட்டும் சிற்றுண்டி அருந்திவிட்டுப் பேசாமல் வெளியே போய்விட்டோம். யாரும் எங்களை வழியில் தடுத்துப் பணம் கேட்கவில்லை. ஆச்சரியமாக இருந்தது எனக்கு. மறு நாளும் இப்படியே செய்து பார்த்தேன். மூன்றும் நாள் எனக்கே பரிதாபமாகப் போய்விட்டது. அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை நம்ப முடியாததாக இருந்தது. மூன்று நாளைய தொகையையும் சேர்த்துச் செலுத்தி விட்டேன். வர்த்தகர்கள், அதிகாரிகள், பொது மக்கள் பரஸ்பரம் வைத்திருக்கும் மதிப்பும் நம்பிக்கையும் இங்கிலாந்து மக்களின் சமூகக் கட்டுக்கோப்பின் ஜீவாதார சக்திகளாக விளங்குவதைக் காணப் பொறாமையாகக் கூட இருக்கும்.

— விஞ்ஞானி ஜி. டி. நாயுடு

மாணவர் மன்றம்

கேள்வி 4 விடைகள்

சி. இ. கண்ணன்
I. U. C.
அமெரிக்கன் கல்லூரி, மதுரை
(பரிசுபெற்றவர்) VI

சாணைபிடித்த கத்தியைக்கூர்மையானது தானா என்று பார்க்க வெட்டிப் பார்ப்பது போன்று, வாங்கிய கலம் ஒழுங்கானதுதானா என்று தட்டிப் பார்ப்பது போன்று, கற்ற அறிவு கருத்துடன் பயின்றதுதானா என்பதைத் தெரிந்து கொள்ளக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும், தேர்வு கண்டிப்பாய்த் தேவை. ஆனால் இன்று தேர்வை, மணமாவதற்கும், கேள்விகள் விற்பதற்கும் உரிய ஒரு வியாபார வகையாக மாற்றி விட்டார்கள் பின்வந்த குறைமதியாளர்கள்! தேர்வு ஒரு வியாபாரம் என்பது ஒழிந்து, தேர்வுக்காகக் கல்வி என்பது மாறி, கல்விக்காகத் தேர்வு என்றநிலை ஏற்பட்டு, தேடிய அறிவைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்குத் தேர்வு பயன்படுமானால் தேர்வு தேவையேதான்.

○●○

நெ. திரு. தர்மலிங்கன் VI
டான்பாஸ்கோ உ.நி.பள்ளி-வேலூர்

தேர்வு மாணவர்களின் அறிவை அளவிடக்கூடிய ஒரேஒரு சிறந்த கருவி. மாணவர்களின் அறிவாகிய செடியைச் செழித்தோங்கி வளரச் செய்வது தேர்வு என்னும் மழைநீரேயாகும், மாணவர்கட்கு மேலும் மேலும் படிக்க ஆர்வமளிப்பது தேர்வேயாகும். ஆதலின் தேர்வு தேவை.

ஆனால் தற்போது நடைமுறையில் உள்ள தேர்வு மாணவர்கள் இரவு முழுவதும் கண்விழித்துப் படிக்க வேண்டிய அளவு கடினமாக உள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கு மாணவர் மீது முழு உரிமையை நடைமுறையில் உள்ள தேர்வு அளிக்கின்றது. இக்குறைகள் மாணவரின் அறிவெனும் செடியின் புல்லுருவிகளாகும். இப்புல்லுருவிகள் நீக்கப்பட்ட தேர்வு இன்றியமையாதது. அது மாணவர்களால் வரவேற்கப்படும்.

○●○

இரா. சவுந்தரராசன் IV
தேசிய உயர் நிலைப்பள்ளி
நாகப்பட்டணம்

மாணவர்களுக்குப் பள்ளிகளும் கல்லூரிகளும் பல கலைகளைப் பயில்விக்கும் கூடங்களாகும். அக்கூடங்களிலே பயில்விக்கப்பெறும் கலைகளைத் திறம்படக் கற்கிறார்களா என்பதை அறியவே தேர்வு வைக்கப்படுகிறது; தேர்வு என்பது சிலருக்கு லாட்டரிச் சீட்டாகவும்–சிலருக்குப் பொழுது போக்காகவும்—பலருக்குப் பயம்கிளரும் கருவியாகவும் இருக்கலாம். ஆனால் கலை கலைக்காக வல்ல, கலை நம் வருங்கால நல் வாழ்வுக்காக என்ற உண்மையை மாணவர் ஒவ்வொருவரும் உணர்ந்துவிட்டால் தேர்வு வைப்பது தேவையேயில்லை!

○●○

இராம. விசுவநாதன்
வலம்புரி வடுகனாதன் உயர்நிலைப் பள்ளி, பொன்னமராவதி.

“புதியன கற்றுப்பழையன நினைவிலிருத்த” பள்ளி செல்லும் மாணவர் படிப்பதில் ஐயம் கொண்ட கல்விக் கழகத்தார் ‘தேர்வு’ வைத்துள்ளனர்! இதில்வெற்றி (35% 25%) பெறவே மிகுதியும் படிக்கும் மாணவர்கள் இயற்கையாகக் கற்பதை இழக்கின்றனர், தேர்வு தேவை என்றால் வீட்டிலிருந்தே

படித்துத் தேர்வு எழுதலாமே! வள்ளுவர் எப் பல்கலைக்கழகத்தி லும் படித்துப் பட்டம் பெற்றவ ரல்ல! கி. பி. 15. ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் "மறுமலர்ச்சி" உண்டாக்கிய "புதியகல்வி" தேர்வை அடிப்படையாகக் கொண் டதல்லவே! ஆகவே அறிவு வளர்ச் சிக்குத் தேர்வு தேவையில்லை,

○●○

ஏ. எம். இராமநாதன் VI
நாட்டுயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி

தாங்கள் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் மாணவ உலகத் தில் உதித்தால் தேர்வு தேவை யில்லை. தேர்வு வைப்பதால் மாண வர்கள் தாங்கள் படிக்கும் படிப்பு வெறும் தேர்வுக்குத்தான்; வாழ்க் கைக்கு உபயோகப்படாது என எண்ணிவிடுகின்றனர். ஒன்றுமே அறியாத மாணவர்கள் தேர்வில் "எப்படியோ" தேறிவிடுகிறார்கள். இத்தத் தேர்வினால் பல ஒழுக்கக் குறைவுகள் மிகுதியாக ஏற்படுகின் றன. பிற்கால வாழ்க்கைக்கு உப யோகப்படும் படியான நிலையிலே கல்வி இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் மாணவர்கள் கல் வியை விரும்பிக்கற்பர். ஓர் ஆண்டு முடிந்தவுடன் அவர்களுக்கு அடுத்த ஆண்டுப் பகுதியைத் தொடங்க வேண்டும். இப்படியிருந்தால் தேர்வு வைப்பது தேவையே இல்லை.

○●○

இரா. பழனியப்பன்
I. U. C.
பூ. சா. கோ. கல்லூரி
பீளமேடு-கோவை

கல்வியறிவிப்பாளர்கள் சீரிய முறையில், தெளிவுபடப் பாடங் களை அறிவித்து, மாணவர்கள் இந் நாட்டின் எதிகாலத் தலைவர்கள், அறிஞர்கள், நாட்டைத் தழைக்கச் செய்யப் பாடுபடுபவர்கள்; ஆகவே அவர்களை அவ்வாறு ஆக்கவேண் டியது நம்மைச் சார்ந்ததே என்று மனத்திலெண்ணி, அன்புடன் அவர்களிடம் கேளவன களைந்து, ஓதுவன ஓதி அவர்களுள்ளங்களில் நல்ல நோக்கத்தை ஏற்படுத்தி, அதற்கான நடைமுறையையும் அவர்களிடத்தில் ஏற்படுத்தப் பாடு படுவார்களாயின் தேர்வும் தேவை யாமோ?

படித்தவர்கள் எண்ணிக்கை உயரவும், கல்வி மன்றங்களில் இடத்தகராறு தாழவும், நாடு நலன் பெறவும் நல்ல வழியாகுமன்றோ?

.... இங்கே கத்தரிக்க ....

கேள்வி எண் 5.

முதியோர் கல்வியில் மாணவர் எம்முறையில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்?

— திரு. கேசவன் —
VI. போர்டு உயர்நிலைப்பள்ளி, காட்டுப்பாடி

விடைகள் கூபனோடுதான் அனுப்ப வேண்டும். அத்துடன் மூன்று புதிய கேள்விகளும் எழுதியனுப்ப வேண் டும். நாலணச்சலில் அனுப்பினால் போதும். விடை 50 சொற்களில் அடங்குதல் வேண்டும்.

முடிவு நாள் 5—5—49

பெயர்..........................
வகுப்பு..............வயது..........
பள்ளி ....
ஊர்..........................
தேதி..............கையெழுத்து

சிறுவர் அரங்கம்

குருவும் சீடனும்

-தனமனோகரன்-



ஒரு சிவனடியான் சிவலிங்கத்தைக் கையிலேந்தித் துதித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு குரங்கு ஓடி வந்து வெடுக்கென லிங்கத்தைப் பிடுங்கிக் கொண்டு பக்கத்து மரத்தில் ஏறிக் கொண்டது. அந்தச் சைவத்தொண்டன் அதை அனுமார் என்று எண்ணிக் கும்பிட்டுக் கூத்தாடிப் பார்த்தான். ஏசித் திட்டிக் கற்களை எறிந்தும் பார்த்தான். ஆனால் குரங்குப் பிடியிலிருந்து சிவலிங்கம் விடுபடவில்லை.

சிவலிங்கத்தை இழந்துவிட்டதால் தனக்கு என்ன துன்பம் நேரிடப்போகிறதோ என்று அஞ்சியவாறு புலம்பிக்கொண்டே தன் குருவினிடம் சென்று "இதற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா"வெனக் கெஞ்சினான்.

குருவோ, "அடே சீடா! உனக்கு இறுதிக்காலம் கிட்டிவிட்டதனாலேயே இவ்வாறு நேரிட்டிருக்கிறது. ஐயோ, தெய்வம் உன் கையைவிட்டுப் போனபோதே நீயும் உன் உயிரை விட்டிருக்க வேண்டும். அதுதான் பிராயச்சித்தமே தவிர வேறு வழியில்லை!" என்றார்.



சீடன் நடுநடுங்கி உடல் பதைக்க, "குருதேவரே! நோய் நொடியின்றி உடல்

நலமாயிருக்கும்போது எப்படிச் சாவேன்?'' என்றான்.



உடனே குருதேவர், "அடா சீடா! ஆறு, கிணறு குளம் குட்டைகளில் விழுந்தாவது, நாக்கைப் பிடுங்கிக் கொண்டாவது உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும்'' என்று சற்றும் இரக்கமின்றித் தீர்ப்புக் கூறினர்.

சீடன், சிறிது நேரம் சிந்தனை செய்து, குருவையும், சோதனை செய்வோமென்று எண்ணி, "சுவாமி! நாக்கைப் பிடுங்கிச்சாகத் தைரியமில்லை. குளத்தில் விழுந்து உயிரை விடலாமென்று எண்ணுகிறேன். தாங்கள் குளத்துக்கு வந்து என்னைத் தைரியப்படுத்திக் கடைசிமுறையாக ஆசீர்வாதம் கொடுக்கவேண்டும்'' என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்று கெஞ்சினன். குருதேவரும் அவ்வாறே சம்மதித்து அவனுடன் புறப்பட்டார். இருவரும் குளத்தை யடைந்து குளக்கரையில் நின்றனர். குருதேவர் சீடனை ஆசீர்வதித்தார். குருதேவர் ஆசீர்வதிக்கும்போது சீடன் அழுது புலம்பி "சுவாமி, தேவரீர், இன்னுமொரு உதவி செய்யவேண்டு'' மென்றான்.



"சரி சீக்கிரம்'' என்றார் குருதேவர்.

"நான் உயிர் விடுமுன் பூசைசெய்வதற்குத் தங்களுடைய சிவலிங்கத்தைச் சிறிதுநேரம் தந்தருள வேண்டும்'' என்றான்.

குருதேவரும் இசையவே, அதனை வாங்கிப் பூசைக்குரிய மந்திரம் சொல்லிக்கொண்டே லிங்கத்தைக் குளத்தில் நழுவ விட்டான். குருதேவர் பதைபதைத்தார்.

சீடனே "சுவாமி, மோசம் வந்தது. லிங்கம் தண்ணீரில் தவறி விழுந்துவிட்டது; போனது போகட்டும் நாமிருவரும் கடவுள்மேல் ஒரே மாதிரியாகப் பக்தி கொண்டிருப்பதால், பலன் கைமேற் கிடைத்துவிட்டது. நாமிருவரும் கைலாசத்திற்கு ஒருமிக்கப் போகும்படி கிடைத்ததே என் பாக்கியம்! தங்களுடைய சிவலிங்கமும் தவறிப்போய் விட்டபடியால், தாங்களும் உயிரைவிட்டேயாக வேண்டும்" என்று சொல்லிக் குருதேவரின் இருபாதங்களையும் கெட்டியாகப் பிடித்து ஆழத்திற்கு இழுத்தான்.

குருதேவர் நடுநடுங்கிப் பதறிக் கூக்குரலிட்டு, "அட பக்தா! விட்டுவிடு. நான் சொன்னது தவறு மன்னித்துவிடு!" என்று கெஞ்சினர். அதன் பிறகுதான் சீடன் காலை விட்டான்.



மாவீரன் அழகிரி

ஏ. கே. வேலன்

அறிவியக்க வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வந்த அறிஞரேறு! செந்தமிழ்ச் சுவைததும்பச் சிங்கக் குரலெடுத்து முழங்கி வந்த தளபதி! மாத்தமிழுக்காக முன்னம் படை நடத்திய மாவீரன்! பெரியாரின் பாதையில் பின்னடைக் காது முன்னேறிச் சென்ற மறத்தமிழன். ஐயகோ! அவர் நம்மைவிட்டுப் பிரிந்தார்.

அவர் அரசியல் வாழ்வில் விளம்பரம் விரும்பாத பெருந்தகை! பொதுவாழ்வில் பெற்ற செல்வாக்கால் தன்னல வசதிகளைத் தேடிக்கொள்ளாத தியாகி! வறுமையில் செம்மை கண்ட பொறுமைக் குன்றம், கடைசி மூச்சுவரை இலட்சிய வாழ்வு நடத்திய தீரன்— என்னே! மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். அந்த மங்காத தங்கத்தை மண்ணிலே புதைத்து விட்டோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இருண்ட வாழ்வில் உழலும் ஏழைகளுக்குப் புது வாழ்வு தேடித்தரப் பாடுபட்ட தேட்டாளனைப் பறிகொடுத்து விட்டோம். அந்தோ! ஆண்டகை அழகிரிசாமி கல்லறை புகுந்தார். உகுந்தது கண்ணீர்! மிகுந்தது துக்கம்!

'பலன் கருதாது தொண்டு செய்யவேண்டும், கட்சி நிழலில் களைப்பாறக்கூடாது, லட்சிய வெற்றிக்குத் தேவை கட்டுப்பாடு' என்ற பாடங்களை அவர் கற்றுக் கொடுத்துள்ளார், வாய்ச்சொல்லால் அல்ல வாழ்க்கை முறையால்!

சீமான்களும் பூமான்களும் அவர் தயவுக்காகத் தவமிருந்த நாட்களுண்டு, உல்லாச புரியில் உலவ வசதி செய்து கொடுக்கக் காத்திருந்தனர். அவற்றைக் கருதவில்லை. எளியவர்களுக்காக எளிமையையே ஏற்றுக்கொண்டார்.

பேச்சுக்கலை அவருக்குப்பிறப்புரிமை. கங்கையைப்போல் காவிரியைப்போல்கருத்துக்கள் ஊறும உள்ளம் அவர் உள்ளம. புரட்சியின் உருவம் அவரே! தோழமைக்கினியவர். நறபண்புகளுககு இருப்பிடம். நெஞ்சிலுற்றதைச் செய்கையில் காட்டும நேர்மையாளன். அவர் இந்நாள நம்மிடை இல்லை; உடலால் மறைந்து விட்டார். ஆனாலுமிருக்கின்றார் புகழுருவில், எதிரொலிக்கின்றார் இளைஞர் உள்ளங்களில்!

வாழ்வுக்கு இலக்கியமான அவ்வீரனின புகழ் என்றென்றும வாழிய!